தமிழ் முரசு

1-17

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : ௧	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி ௧௭

பொருளடக்கம்

சிறையில் அடையுங்கள்		...	௨
தமிழரசுக் கழக மாநாடு அறிக்கை		...	௮
வடக்கெல்லையில் ம. பொ. சி.	சி. வே.	...	௯
அ ன் திருடன்	நா. ஜகந்நாதன்	...	௧௭
பாமரனுக்கும் மார்க்ஸிசம்	ஜமதக்னி	...	௨௫
வேங்கடத்தை விடமாட்டோம்!	ம. பொ. சி.	...	௩௨
மதிப்புரை		...	௩௯

அட்டை படம் : சுப்பிரமணிய பாரதியார்

விலை 4 அணா **1-9-47**

சிறையில் அடையுங்கள்

ஆகஸ்டு 15-ல் சுதந்திரம் வந்ததென்று ஆனந்தப் பள்ளு பாடினோம். வெள்ளையரை வெற்றி கண்ட செய்தியை எட்டுத் திக்கும் எட்ட முரசு கொட்டினோம்.

வெற்றி முழக்குங்கள் !

வெண் சங்க மூதுங்கள் !

பெற்ற தாயின் புகழைப் பேசுங்கள் !

என்ற இசையொலி இல்லந்தோறும் எழுந்தது. கட்டிடங்கள் தோறும் மூவர்ணக் கொடி சுதந்திரக் காற்றில் அசைந்தாடியது. நாட்டு மக்கள் தொகையைவிட நாட்டில் அன்று பறந்த கொடிகளின் எண்ணிக்கையே அதிகரித்திருந்தன. ஆம்; கவலையை மறந்து களியாட்டம் நடத்தினோம். இது இயற்கை.

ஆனால், களிப்பு நெடு நாட்கள் நீடிக்கவில்லை. சுதந்திரம் பெற்ற நாட்டில் மக்கள் கண்ட முதல் காட்சி சுகவாழ்வல்ல; சோற்றுப் பஞ்சம். சென்னை மாகாணம் வங்கத்தைப்போல் ஆகிவிடுமோ என்று அமைச்சர்களே அஞ்சும் அளவுக்கு மாகாணத்தின் உணவு நிலைமை மோசமாகிவிட்டது.

இப்பொழுது கொடுக்கப்படும் உணவுப் பங்கீடு போதுமானதல்ல. இந்தக் குறைந்த அளவும் கிராமங்களில் ஒழுங்காகத் தரப்படுவதில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் சில கிராமங்களில் ஒரு வாரம்வரை பங்கீடே தரப்படவில்லை என்றும், கொடுத்த நாட்களி

னும் 4 அவுன்ஸ் அரிசிதான் கொடுக்கப்பட்ட தென்றும் செய்தித் தாள்கள் மூலம் அறிகிறோம்.

இந்தச் சீர்கெட்ட நிலைமையில் நடந்துவரும் உணவுப் பங்கீடுகூட இன்னும் சில வாரங்களில் அடியோடு நின்றுவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிடுமென சென்னை உணவு மந்திரி டாக்டர் ராஜன் அறிவிக்கிறார். சுதந்திரம் வந்துவிட்டதென்ற செய்தியால் நமக்கேற்பட்ட களிப்பைவிட, 'சோற்றுப் பஞ்சம் வரப்போகிறது' என்று அமைச்சர் அறிவிக்கும் செய்தியால் ஏற்படும் கவலையே மிக மிக அதிகம். இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?

வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்த்த அளவுக்கு உதவி கிடைக்கவில்லை.

மத்திய சர்க்கார் ஒன்றும் உதவி செய்வதற்கில்லை என்று கையை விரித்துவிட்டது.

மாகாணத்தில் கொள்முதல் திருப்திகரமாயில்லை. இவைதான் உணவு மந்திரி டாக்டர் ராஜன் தரும் தகவல்கள்.

வெளிநாடுகளிலிருந்து உதவி எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததாயினும், அதையே நம்பியிருக்க முடியாது என்பதை அரசாங்கம் முன்பே அறிந்திருக்கவேண்டும்.

மாகாண சர்க்காரைக் கைவிடவேண்டிய அளவுக்கு உண்மையிலேயே மத்திய சர்க்கார் சக்தியற்றிருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இவை எல்லாவற்றையும்விட, சென்னை சர்க்காரின் கொள்முதல் திருப்திகரமாக இல்லாமைதான் உணவு நெருக்கடி தோன்றுவதற்கு முக்கிய காரணமாகும். இதை உணவு அமைச்சரே ஒப்புக்கொள்கிறார்.

> "எல்லா இடங்களிலும் இருப்பு இருக்கிறது. ஆனால், கொள்முதல் செய்வதுதான் கஷ்டமாக இருக்கிறது. சில இடங்களில் கொள்முதல் வேலையில் ஈடுபட்ட அதிகாரிகள் தாக்கப்பட்டும் இருக்கின்றனர்"

என்று சென்னை சர்வதேச சங்கத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். இதிலிருந்து பதுக்கல் வேலை மிக அதிகமாகவும் துணிச்சலாகவும் நடக்கிறதென்றே தெரிகிறது. தாங்களாகவே கொடுக்காததோடு, வாங்கவரும் அதிகாரிகளையும் தாக்குகிறார்கள் என்றால் அவர்கள்மீது சர்க்கார் எடுத்த கடுமையான நடவடிக்கை என்ன? பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை இந்தச் சமூகத் துரோகிகள்மீது ஏன் பிரயோகிக்கக்கூடாது? இதைப்பற்றி டாக்டர் ராஜன் மழுப்பிப் பேசுகிறார்.

> "இன்னும் ஐந்து ஆண்டுகள் வரை உணவுத் தொல்லை இருக்குமாதலால் பலாத்காரம் உபயோகிக்கக்கூடாது. விவசாயத்திலேயே உற்பத்தியாளர் நம்பிக்கை இழக்கும்படி செய்யக்கூடாது. உற்பத்தியாளரை

> உற்சாகப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்"

என்று டாக்டர் ராஜன் கூறுகிறார். உணவு மந்திரியின் இந்தத் தட்டிக் கொடுக்கும் மனப்பான்மை சரணாகதிக்கு ஒப்பானதாகும். சென்னை கவர்னர் நைபிரபு,

> 'பதுக்கி வைத்துள்ள தானியத்தைக் கண்டு பிடிக்க ஒவ்வொரு வீட்டிலும் சோதனை நடத்த வேண்டும்.'

என்று கூறுகிறார். அமைச்சரின் பேச்சைவிட கவர்னரின் துணிபு சிறிது ஆறுதல் அளிப்பதாயிருக்கிறது. ஆனால் அதுமட்டும் போதாது. பதுக்கி வைக்கும் புத்தியினால் மக்களைப் பஞ்சந்துக் கிரையாக்கும் இந்தப் பாதகர்களைச் சிறையிலடைத்தா லொழிய நாட்டின் உணவு நிலைமை சீர்பட முடியாது. மிராசுதார்களை உற்சாகப்படுத்துவதுதான் பஞ்சத்தைப் போக்கும் வழி என்று டாக்டர் ராஜன் எண்ணுவாரேயானால், கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்க நினைத்த புத்திசாலியோடு போட்டி போடுவதையே ஒக்கும். இதே போக்கை டாக்டர் ராஜன் இனியும் கடைப்பிடிப்பாரானால், உணவுப் பஞ்சம் மக்கள் உயிரைப் பலிவாங்கிவிடுவது திண்ணம்.

மேலும் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க சரியானபடி திட்டமிட்டு வேலை செய்வதாகக் காணோம். உற்பத்தியாளரை உற்சாகப்படுத்து

வதில் அக்கரை காட்டும் உணவு மந்திரி உற்பத்தியைப் பெருக்க உடலுருக உழைக்கும் உழவர்களை உற்சாகப்படுத்த இதுவரை என்ன செய்திருக்கிறார்? திரு. பிரகாசம் பிரதமராக இருந்த காலத்தில், உற்பத்தியைப் பெருக்குவதில் தமக்குள்ள ஒப்பற்ற திறமையைப்பற்றி டாக்டர் ராஜன் மேல்சபையில் ஆற்றிய சொற்பெருக்கை நாம் இதற்குள் மறந்து விடவில்லை. ஆனால் இன்று தோன்றியுள்ள உணவு நெருக்கடி அமைச்சர் ராஜனின் திறமையை அறை கூவுகிறது. இந்த அறைகூவலை ஏற்று அவர் பஞ்சத்தைச் சமாளித்தே தீரவேண்டும்.

> "நெருக்கடியான நேரங்களில் செய்ய வேண்டிய உதவியைச் சட்டசபை உறுப்பினர்கள் செய்யவில்லை. சிலர் கொள்முதலுக்கு உதவி செய்வதற்குப் பதில் தடங்கல்கள்தான் அதிகம் செய்கிறார்கள்."

என்று உணவு மந்திரி கூறுகிறார்.

இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களில் சிலர் மக்களுக்கே துரோகம் செய்கிறார்கள் என்றே ஏற்படுகிறது. ஆனால் அப்படிப்பட்டவர்கள் யார் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்து அவர்கள் மீது கட்சிமூலமோ, அரசாங்கச் சட்டமூலமோ நடவடிக்கை எடுப்பதற்கென்ன? உணவுப் பொருள்களைப் பதுக்கிவைக்கும் **கள்வர்கள்** சட்ட சபையில் இடம் பெறுவார்களானல், அத்தகையவர்கள் சர்க்காரை நடத்தும்

கட்சியிலும் செல்வாக்குடையவர்களானால் அந்த சர்க்காரும் அதை நடத்திவைக்கும் கட்சியும் பஞ்சத்தைப் போக்கிவிட முடியும் என்று சென்னை மக்கள் எப்படி நம்புவார்கள்? எனவே அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

● மத்திய சர்க்காரிடம் போராடிப் போதிய உதவியை உடனே வாங்குங்கள்.

● பதுக்கிவைக்கும் கள்வர்களைக் கைதுசெய்து சிறையிலடைத்து அவர்களது நிலங்களைப் பறிமுதல் செய்யுங்கள்.

● உற்பத்தியைப் பெருக்க உழைக்கும் உழவர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து உற்சாக மூட்டுங்கள்.

சுதந்திரமடைந்த தேசம் சுபிட்சமடைவதெப்படி!

இதுவே இன்றைய இந்திய பிரச்சனை!

இந்த பிரச்சனைக்கு ஏற்ற பரிகாரம் காண

"எல்லோரும் இன்புற்றிருக்க ஜெயபிரகாஷ்"

என்ற புத்தகத்தைப் படியுங்கள்!

சுதந்திர வாழ்விற்கு இதமான வழிகாட்டும் இந்நூலை

குடியாத்தம் கோ. அருணசலம்

கோர்வையாக தொகுத்திருக்கிறார்.

மதுரைக்கு மட்டும் 1000 பிரதிகள்! உங்கள் பிரதிக்கு முந்துங்கள். தனிபிரதி வேண்டுவோர் 10 அணா தபால் பில்லைகள் அனுப்பவேண்டும்.

பொன்னெழுத்துப் பொறிப்பகம்,

காங்கிரஸ் ஹவுஸ் ரோட்டு, குடியாத்தம். N. A.

தமிழரசுக் கழக மாநாடு

வரவேற்புத் தலைவர் அறிக்கை

தமிழரசுக் கழக முதலாவது மாநாட்டின் வரவேற்புத் தலைவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அறிவிப்பதாவது:—

இம்மாதம் நடைபெறுவதாயிருந்த தமிழரசுக் கழக மாநாட்டை மேலும் சில வாரங்களுக்குத் தள்ளிப்போடுவதென வரவேற்புக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன மற்றும் சில ஜில்லாக்களில், குறிப்பாக, மதுரை, திருச்சி, இராமநாதபரம் ஆகிய இடங்களில் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் விரைவில் சுற்றுப்பிரயாணம் செய்து கிளைக் கழகங்களை அமைகக இருப்பதால் தான் மாநாட்டைத் தள்ளிவைக்க நேர்ந்தது. கழக அமைப்பு வேலைகள் ஓரளவு முடிவுபெற்றதும் மாநாட்டின் தேதி அறிவிக்கப்படும்.

இதற்குள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து தெரிவிக்க வேண்டும். வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகச் சேர விரும்புகின்றவர்கள் ரூபாய் ஐந்துக்குக் குறையாமல் கட்டணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். மாநாட்டு சம்மந்தமான கடிதப் போக்குவரத்துகள், கட்டணம் அனுப்புதல் ஆகியவைகளை, திரு. அ. லூயிஸ், வரவேற்புக் கழகச் செயலாளர், 'தமிழ் முரசு'ச் செயலகம், இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. என்ற விலாசத்துக்கு அறிவிக்கக் கோருகின்றேன்.

வடக்கெல்லையில் ம. பொ. சி.

சி வே.

> "ஆகஸ்டு 15ஐ நாம் போர்க்களத்தில் நின்று தான் கொண்டாடுகின்றோம். ஆகவே, இந்நாள் நடந்த போர் நிறுத்த நாளல்ல; போர்முனையும் போர் முறையும் மாறும் நாள்."

என்று 'தமிழ் முரசு' ஒலித்தது. முரசின் ஒலியிலே ஒளியும் உண்டு. அந்த ஒளியிலே தமிழரசுக் கழகத்தின் திட்டத்தை நிறைவேற்றும் சூழாத்தையும் காணலாம்.

ஆகஸ்டு பதினைந்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிந்த நாளாகத்தான்—அதை ஒழித்த தியாகிகளின் திருநாளாகத் தான் கொண்டாடினோம். ஆகஸ்டு பதினாறில் போர்முனை மாறியது. மேற்கு திசை நோக்கி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட நாம் வடக்கு திசை நோக்கி ஆதிக்க வாதிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யக் கடமைப்பட்டோம்.

போர்முனை மாறியதுபோலவே, போர் முறையும் மாறியது. இத்தனை நாளும் நிறத்தால், உடையால், உணவால், பண்பாட்டால் எல்லாவற்றாலும் மாறுபட்ட ஒரு இனத்தாரிடம் போரிட்டோம். அப் போரிலே பாசம் மறைந்து பகைமை கலந்தது; நாச வேலையும் நிகழ்ந்தது. அதை நாம் வரவேற்காவிட்டாலும்கூட நிகழ்ச்சி உண்மை. ஆனால், வடக்கு திசைக் கிளர்ச்சி நமது சகோதர இனத்தார் சம்பந்தப்பட்டதாகும். வட இந்திய தேசிய இனங்களுடன் நமக்குள்ள போராட்டம் அரசியல், பொருளாதார, கலாசார சம்பந்தப் பட்டவை. ஆகவே, ஆங்கிலேயரிடம் காட்டிய பகைமையை நமது அண்டை இனத்தாரிடமும் காட்டுவதற்கில்லை; காட்டுவதும் நன்மையல்ல. என்றாலும் நமது உரிமையைப் பறிக்க முயல்வோரிடம்—பறித்து வாழ்வோரிடம் உரிமையைப் பெற நாம் போரிட்டே யாகவேண்டும்.

இங்கே நாம் காட்டுவது பகைமையல்ல; உரிமையைப் பெறுவதற்கான உறுதியேயாகும். இந்த முனையில் நாம் பேசித் தீர்ப்பதே நல்லது. அது முடியாத இடத்தில் பிரசாரத்தின்மூலம் கிளர்ச்சியைத் துவக்குவதே உரிமையைப்பெற உள்ள ஒரே வழி. முதல் வழிக்கு முட்டுக்கட்டை தோன்றி விட்டதால் தமிழரசுக் கழகத்தார் இரண்டாவது வழியைக் கைப்பற்றலாயினர். இதைத்தான் போர் முறையின் மாற்றமாக 'தமிழ் முரசு' தமிழ் நாட்டாருக்கு அறிவித்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முனையில் வெற்றிபெற்ற நாம் வெள்ளையரை விரட்டி யடித்தோம். ஆனால், வடக்கு முனையில் தமிழர் வெற்றிபெற்ற பின்னர் பிற இனத்தவரிடம் சிறப்பாக, வட இந்தியரிடம், தன்மானத்துக்குக் கேடற்றவகையில் சேர்ந்து வாழுவோமே ஒழிய சீற்றம் கொண்டு அவர்களைச் சீர்குலைக்க மாட்டோம். நம்மையும் சீர்குலைவுக்கு ஆளாக்கிக்கொள்ள மாட்டோம். ஆனால், வடஇந்திய ஆதிக்கவாதிகளிடமிருந்து நமது அரசுரிமையைப் பெறப் போரிடவேண்டிய அதே நேரத்தில் ஆந்திர ஆதிக்கவாதிகளிடமிருந்து தமிழகத்தின் வடக்கெல்லையை மீட்கும் கிளர்ச்சியையும் நடத்த வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று.

எனவே, ஆகஸ்டு பதினோராந்தேதி தமிழர் படை வடதிசை நோக்கிக் கிளம்பியது. தமிழரசுக் கழகச் செயலாளர் கொ. மொ. ஜனார்த்தனம், திருவாளர்கள் சோம. சுவாமிநாதன், லூயிஸ், விசுவநாதம், கிருஷ்ணமூர்த்தி, அம்மையப்பன், தாமோதரம், வேணுகோபால் தங்கவேலு, ஆறுமுகம், சுப்பிரமணியம் ஆகியோர் படையில் இருந்தனர். நானும் கலந்திருந்தேன், தலைவர் திரு. ம. பொ. சி. படைக்குத் தலைமை தாங்கினார் என்பதைச் சொல்லவா வேண்டும்? பதின்மூன்றுபேர் ஒன்று சேர்ந்தால் அதிலும் பண்டைத் தமிழகத்தின் இழந்து விட்ட ஒரு பகுதியை மீட்கும் கிளர்ச்சிக்கு வித்திடக் கிளம்புகிறோம் என்றால் உள்ளக் களிப்புக்குச் சொல்லவா வேண்டும்!

பகல் பதிஞேறு மணிக்கு திருவாலங்காடு சேர்ந்தோம். திருவாலங்காடு என்ற உடனே தமிழருக்கு தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகத்தான் நினைவிருக்கும். நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு பேர் தமிழரான அந்த ஊர் ஆந்திர நாட்டில்தான் இருந்து வருகிறது என்பதை அநேகம் பேர் அறிய மாட்டார்கள். திருவாலங்காட்டில் மாலை ஆறு மணிக்கு கூட்டம் நடந்தது.

ஆந்திர ஆதிக்கத்திலுள்ள ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதென்ருல் அதுவும் ஆதிக்கவாதிகளின் ஆசைக்கு முடிவுகட்டும் முயற்சிக்காக என்ருல் நாங்கள் அங்கு இன்பங் கலந்த வரவேற்பை எப்படி எதிர்பார்க்க முடியும். தலைவர் ம. பொ. சி. உள்பட எல்லோரும் கல்லடியையும், சொல்லடியையும் எதிர்பார்த்துத்தான் சென்ருேம். ஓராண்டுக்கு முன் குமரி முனையில் எல்லைப் போரைத் துவக்கிவைத்த ம. பொ. சி. கூட இங்கு சிறிது எச்சரிக்கையுடன்தான் பிரயாணத்தைத் துவக்கிஞர். ஆனுல் திருவாலங்காட்டிலிருந்து திருப்பதிவரை நாங்கள் கண்டதென்ன? 'அனுவசியமாக தமிழருக்கும் தெலுங்கருக்கும் விரோதம் மூட்ட வந்தீர்களா?' என்று எங்களை அங்கு வாழ்வோர் விரட்டியடிக்கவில்லை. 'திருப்பதி மீண்டும் திரும்பாது, நீங்கள் திரும்பிப்போங்கள்' என்று எங்களைத் திருப்பி அனுப்பவில்லை. மேளதாளங்களோடு கூடிய ஊர்வலத்துடன் மாலைசூட்டி மகிழ்ச்சி காட்டி மக்கள் மனமுவந்து வரவேற்றனர். தேசியக் கொடியும், தமிழ்க் கொடியும் தெருவெங்கும் காட்சி அளித்தன. 'வேங்கடத்தை விடமாட்டோம்' 'தமிழ்க் கொடியை நாட்டுவோம்' 'சங்ககாலம் மீண்டும் வருக' என்ற தமிழ் மணக்க, இனப்புரட்சி எழுப்பும் பேரொலிகள் எங்கள் காதுகளைத் துளைத்தன. திருவாலங்காட்டிலிருந்து திருப்பதிவரை எல்லா ஊர்களிலும் இந்தக் காட்சிகளும் கோஷங்களும் எங்களை விட்டு அகலவில்லை.

திருவாலங்காட்டுக் கூட்டத்தில் திரு. ம. பொ. சி. தலைமை தாங்கிஞர். ஆசிரியர் மங்கலங் கிழார், வழக்கறிஞர் அரங்க

ஞத முதலியார் ஆகிய சித்தூர் ஜில்லா பிரமுகர்கள் ஆங்கு வாழும் தமிழர்களின் குறையை ஆதியோடு அந்தமாகக் கூறினார்கள். கழகச் செயலாளர் திரு. கொ. மொ. ஜனார்த்தனம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர். தலைவர் ம. பொ. சி. முடிவுரையாக ஒருமணி நேரம் பேசினார்.

"குமரிமுதல் வேங்கடம்வரை கொண்ட பண்டைத் தமிழகம் மீண்டும் உருவாகவேண்டும் — அதில் தமிழரசு அதுவும் முடியரசாய் இல்லாமல் குடியரசு அமையவேண்டும். சுரண்டலற்ற சோஷலிச ஆட்சியே மலரவேண்டும். 'பழைய கனவு பலிக்காது' என்று பலர் கூறுகின்றனர். அந்த அன்பர்களைக் கேட்கின்றேன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அசோகர் கண்ட இந்தியப் பேரரசை இன்று காண முடியும்போது, அந்த அசோகரின் மறைந்துபட்ட தர்ம சக்கரம் இன்றைய புது வாழ்வு பெற்ற மூவர்ணக் கொடியில் புத்துயிர்பெற்று விளங்கும்போது தமிழர்மட்டும் தங்கள் பண்டைய வாழ்வின் அடிப்படையில் புதிய தமிழகத்தை—தமிழரசைக் காணமுடியாதென்று கூறுவது வஞ்சனையாலா? வரலாறு என்பதே இன்னதென்று அறியாததாலா? பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கண்ட அசோக சாம்ராஜ்யம் உருவாகிவிட்டதென்று நமது தலைவர்கள் உள்ளம் களிக்கும்போது அந்த சாம்ராஜ்யத்திலும், அந்த சாம்ராஜ்யம் அழிந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் தனியரசாக விளங்கிய தமிழகம் ஏன் இன்று தன்னாட்சி பெற இயலாது." என்று பேசினார். கிராம மக்களுக்கேற்ற வகையில் உவமானங்களையும் கதைகளையும் கொண்டு தமது கருத்தை விளக்கினார். அன்று பகலும், இரவும் அவ்வூர் சத்திரத்தில் தங்கினோம். உள்ளூர் காங்கிரஸ் கமிட்டி, பஞ்சாயத்துப் போர்டு ஆகியவற்றின் தலைவர் திரு. திருமலைப் பிள்ளை எங்களுக்கு உணவளித்துக் காத்தார்.

கனகம்ம சத்திரம்

மறுநாள் பதினேழாம் தேதி அதிகாலை மாட்டு வண்டியில் கனகம்ம சத்திரம் புறப்பட்டோம். அவ்வூர் திருவாலங்

காட்டிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ளது. வண்டி போக்குவரத்துக்கு ஒழுங்கான பாதையில்லை. சிறு சிறு குன்றங்களின் உடைப்புகளின் வழியேதான் செல்ல வேண்டும். நாங்கள் மாட்டு வண்டியில் சென்றோம். எங்கள் அனைவருக்கும் போதிய வண்டிகள் கிராமத்தில் கிடைக்க வில்லை; இரண்டு வண்டிகளே கிடைத்தன. எனவே சிலர் மட்டும் வண்டிகளிலிருக்கவும் பலர் வண்டிகளைப் பின்பற்றி நடக்கவும் நேரிட்டது. நாங்கள் சென்ற பாதையின் நிலையை என்னென்று வர்ணிப்பது? வழியெங்கும் 'நவரத்தினங்கள்' சிதறிக்கிடந்தன என்றுதான் கூறவேண்டும். ஒவ்வொரு 'ரத்தின'மும் பனங்காய் அளவுக்குக் குறைந்ததாய் இல்லை! அவற்றின் இடையே 'வைரக்' குப்பைகள்போன்று சிறு பரல் கள் பரவிக்கிடந்தன. இத்தகைய 'ராஜ பாட்டை'யில் இரட்டை மாட்டு வண்டியில் செல்லும் தலைவரின் நிலையை எங்களால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. தளராத உள்ளமென்றாலும், சிறை வாழ்க்கையால் குடல் மெலிந்து புண்ணாகியல்லவா இருக்கின்றது. அவருக்கு என்னாகுமோ என்ற வருத்தம் எல்லோருக்கும். ஆனால், அவரோ, தமிழ்த் தாயின் மனப்புண்ணை ஆற்றப்போகிறோம் என்ற உற்சாகத் தில் தன் வயிற்றுப் புண்ணையும் பொருட்படுத்தாமல் சோர் வுற்றிருந்த எங்களுக்குக் கதைகளைச் சொல்லி மகிழ்ச்சி யூட்டிக் கொண்டே வந்ததைப் பார்த்தபோது தமிழ்த் தொண்டின் ஆற்றல் எத்தகையது என்பது எங்களுக்கு விளங்கியது.

கனகம்ம சத்திரம் செல்லுமுன் அதற்கு சில பர்லாங்குக ளுக்கு இப்பாலுள்ள ஒரு குக்கிராமத்தில் முத்துகொண் டாபுரம் திரு. துரைசாமி ரெட்டியார் என்பவரின் இல் லத்தில் தங்கி பகல் உணவருந்தினோம். எங்களுக்கு உண வளித்த அம்மையாரின் தாயன்பையும் விருந்தோம்பும் சீரிய பண்பையும் நாங்கள் என்றென்றும் மறக்கமுடியாது. இங்கு ஒரு புதுமையைக் கண்டோம். எங்களை உபசரித்தவர் துரை சாமி ரெட்டியார் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் அவர் ரெட்டியாரல்ல, முதலியார். அவருடைய உறவினரெல்லாம்

செங்கற்பட்டிலும், சென்னையிலுமுள்ளனர். அவரும் குடும்பத்தினரும் வீட்டிலும் வெளியிலும் தமிழிலும், தெலுங்கிலும் சந்தர்ப்பத்திற் கேற்றாற்போல் நன்கு பேசுகின்றனர். ஆனால், அவர் தன்னைத் தமிழர் என்றே எண்ணுவதோடு வேங்கடம்வரை உள்ள தமிழ் நிலத்தைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்காகப் பாடுபடுவதென்றும் உறுதி கொண்டுள்ளார். ஏறக்குறைய சித்தூர் ஜில்லாவிலுள்ள மிகப் பெரும்பாலான தெலுங்கர்களின் நிலை இவரைப்போன்றதுதான். சென்னையிலிருந்துகொண்டே திருப்பதியைக் கேட்பது அநீதி! அநீதி!! என்று அலறுபவர்கள் சித்தூர் ஜில்லாவைச் சுற்றி வருவார்களேயானால், இந்த உண்மையைப் புரிந்துகொள்வார்கள். உண்மையைச் சொன்னால் திருப்பதி தமிழகத்தின் வடக்கெல்லையாக அமைவதற்குக் குறுக்கே நிற்பது ஆந்திரர்கள்கூட அல்ல; தமிழருடைய ஆராய்ச்சியற்ற தன்மையேயாகும்.

கனகம்ம சத்திரத்தில் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டோம். அங்கு கூட்டம் பகல் 2 மணிக்கு ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. ம. பொ. சி. உள்பட எங்களில் பலர் பேசினர். உள்ளூர் போலீஸ் அதிகாரி ஒருவரும் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார். தெலுங்கு பேசும் மக்களில் செல்வாக்குள்ள பிரமுகர்கள் பலர் ம. பொ. சி.யைக் கண்டு மேலும் பல வாரங்கள் தங்கி சித்தூர் ஜில்லாவில் இன உணர்ச்சியை எழுப்பவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். 'விதை ஊன்றியாயிற்று; பின்னர் அறுவடைக்கிடையில் இன்னும் வேலை எவ்வளவோ இருக்கின்றன. ஆகவே, நான் அடிக்கடி வருவேன்' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார். அங்கிருந்து பஸ்ஸில் புறப்பட்டு நாங்கள் நேரே திருத்தணிக்கு வந்து சேர்ந்தோம். கனகம்ம சத்திரத்திலிருந்து பஸ் புறப்பட்டபோது மக்கள் வழியனுப்பிய காட்சி என்றென்றும் மறக்க முடியாதது.

திருத்தணிகை

மாலை 5 மணிக்கு திருத்தணி வந்ததும் ஒரு பெரிய ஊர் வலம் நடைபெற்றது. தமிழ்க்கொடி, மூவர்ண தேசியக் கொடி, தமிழரது கோரிக்கையை அறிவிக்கும் அட்டைகள் ஆகியவைகளுடன் இளைஞர்கள் வீதிகளில் பவனி வந்தனர்.

மாலை ஆறு மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. உள்ளூர் வழக்கறிஞர் திரு. ஆறுமுக முதலியார் தலைமை வகித்தார். திரு. கொ. மொ. ஜனார்த்தனம் முதலில் பேசிக்கொண்டே வரும்போது இரண்டொருவர் இடையில், கேள்விகள் கேட்டு குழப்பம் விளைவிக்க முயற்சித்தனர். ஆனால், தமிழ்க் கொடியின் கீழ் கூடியிருந்த திரளான மக்கள் அவர்களைச் சட்டை செய்யாமல் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த உதவிபுரிந்தனர். பின்னர் திரு. ம. பொ. சி. சுமார் ஒருமணி நேரம் பேசினார். அவர் பேச்சுக்கிடையில் மழை வந்துவிட்டதால் எதிரேயுள்ள வன்னியர் சத்திரத்திற்கு கூட்டம் மாற்றப்பட்டது. ம. பொ. சி. பேசியதாவது:

"இங்கு ஒரு சிலர் கூட்டத்தைக் கலைப்பதென்ற முடிவோடு வந்திருந்தனர். ஆனால், அவர்கள் வெற்றிபெற முடியவில்லை. பெருவாரியான தமிழர்கள் நிறைந்தது திருத்தணித் தாலுக்கா என்றாலும், இதில் சிறிய குமஸ்தாமுதல் பெரிய அதிகாரிகள் வரை பெரும்பாலும் ஆந்திரர்களே யிருக்கின்றனர். நான் ஆந்திரர்களின் பகைவனல்ல; சென்னையில் பிரகாசம் உப்புப்போர் நடத்திய காலை நான் அவர் கட்டளைப்படி கடமையைச் செய்தவன். சென்னை ஜவுளிக்கடை மறியலில் அடிபட்டு வீழ்ந்த தொண்டர்களைத் தோளில் சுமந்தவன். அவர்களில் ஆந்திரரும் பலருண்டு அந்தத் தியாகிகளின் அடிபட்ட புண்ணிலிருந்து ஒழுகிய ரத்தம் என்னுடைய உடலிலும் படும்பேறு பெற்றேன். அந்த நாள்முதல் அண்மையில் நடந்த ஆகஸ்டுப் போர்வரை தடியடியிலும் சிறைவாசத்திலும் ஆந்திரர்களுடன் இணைந்தே பங்கு கொண்டேன். ஆனால் தமிழருக்குரிய நிலத்

தைப் பறிப்பவர் யாராலும் விடமுடியாது. பண்டை உறவை, பாரத நாட்டுப் பணியின் நினைவைக் கொஞ்சம் மறந்தேனும் எனது தாயகத்தை மீட்டே தீருவேன். அதுவும், மிகப் பெரும்பாலோர் தமிழராக இருக்கும் திருத்தணியையா விட்டு விடுவது? முடியவே முடியாது'' என்று முழங்கினர்.

பின்னர் திரு. விநாயகம் எம். ஏ. பேசுகையில், ''நான் ஒரு தமிழனாயிருந்தும் சூழ் நிலையின் காரணமாக நான் ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக தெலுங்கைப் படித்தேன். தமிழைக் கற்கவில்லை. தெலுங்கை நான் போற்றுகிறேன்; என்றாலும் தமிழை மறக்கவேண்டிய ஒரு கட்டாய நிலையில் சித்தூர் ஜில்லா தமிழர்கள் இருக்கும் ஒரு துக்க நிலைக்கு நாங்கள் வருந்தாதிருக்க முடியாது. அதைவிட கொடுமை, எங்களைக் காட்டி எங்கள் தாயகத்தின் வடக்கெல்லையைப் பறிக்க ஆந்திரர் முயல்வதாகும்' என்று உணர்ச்சிததும்பப் பேசினர்.

(தொடரும்)

அவன் திருடன்?

நா. ஜகந்நாதன்

அவனைத் 'திருடன்' என்றுகூறியது சட்டம்; அதனை ஒப்புக்கொண்டனர்; மண்ணாய்ப் போகவேண்டிய சட்டத்தைக் கரைத்துக் குடித்த நிபுணர்கள். ஆனால் அவன் மட்டுந்தானா திருடன்?

*　　　　*　　　　*

இருபத்திரண்டு வயதிற்குள் வாழ்க்கையின் எல்லாவிதமான உருவங்களையும் கண்டு உணர்ந்துகொண்டவன் கந்தசாமி. ஆகவே, அந்த இளமையிலேயே அவனுக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. இளமையிலிருந்தே துடுக்கான காரியங்களைச் செய்வதற்கு அஞ்சாதவன் கந்தசாமி. அவன் தகப்பன் இறக்கும்போது அவனுக்கு வைத்துவிட்டுப்போன சொத்துக்கள் ஓர் ஓட்டைக்குடிசை, செத்துக்கொண்டிருக்கும் ஒரு மாடு, கூர் மழுங்கிப்போன ஒரு கோடாரி—இவைதான். இவற்றைக் கொண்டுதான் அவன் இவ்வுலகத்தில் வாழவேண்டியிருந்தது.

அவனுடைய தகப்பன் இறந்ததும், தாய் எப்படியோ கூலிவேலை செய்து மகனைக் காப்பாற்றிவந்தாள். அவன் கையில் நாலுகாசு கிடைத்ததும், நண்பர்கள் சூழ்ந்துகொண்டு அவனுக்கு வழிகாட்டினர்; எங்கே? கள்ளுக்கடைக்கு! அப்போது அவனுக்கு வயது பதினெட்டு. இந்த வயதிலேயே கந்தசாமி 'குடிகாரன்' பட்டத்தைச் சுமக்க ஆரம்பித்தான். தாய் எவ்வளவோ கண்டித்துப் பார்த்தாள்; பயனில்லை! பணம் கொடுக்காவிடில் தாயைக்கூட அடிக்க ஆரம்பித்தான் கந்தசாமி! மகனின் நடத்தைகளால் மனம்

உடைந்த தாய் அவனைத் தனியே விட்டால்தான் 'புத்தி வரும்' என்று எண்ணியோ என்னவோ, உயிரைவிட்டாள்.

கந்தசாமிக்கு இப்போதுதான் உண்மையான உலகம் கண்ணுக்குப் புலப்பட்டது. உழைத்தால்தான் உணவு என்றுஉணர்ந்துகொண்டான். என்றுமே வளையாத அவன் உடம்பு வளைந்து வேலைசெய்ய ஆரம்பித்ததால் சிறிது பணம் கிடைத்தது. அவன் தன் நண்பர்களையெல்லாம் விரட்டி விட்டான். தாயின் பேச்சைக் கேளாததையும், அவளை அடித்துத் துன்புறுத்தியதையும், கள்வெறியில் கடமையை மறந்ததையும் நினைத்து நினைத்து மனம் வருந்தினான். உண்மையில் அவன்தாய் எண்ணிபடியே அவனுக்குப் 'புத்தி வந்தது.' சிக்கனமாகச் செலவுசெய்து பணத்தைச் சேகரித்து வைக்கலானான்.

இவனுடைய புதிய வாழ்வைக் கண்டு அவ்வூர் முழுவதும் வியந்தது. மற்றும் அவனுக்குப் பெண்கொடுக்கப் பலர்போட்டி போட்டுக்கொண்டு வந்தனர். கந்தசாமி வள்ளியென்றவளை மணந்துகொண்டான். ஆப்போதும் அவனிடமிருந்த துர்நடத்தைகள் யாவும் ஒழியவில்லை ; ஓடி ஒளிந்து கொண்டன; சமயம் வரும்போது மீண்டும் பிடித்துக் கொள்ள. 'இவனுடைய உல்லாச வாழ்வைக் கண்ட பழைய 'நண்பர்கள்'தேடிவந்தனர்...காசெல்லாம் கள்ளாக மாறியது. ....'கள்ளுக்கடையின் பக்கம் கண்ணெடுத்தும் பாரேன்' என்று கூறியவன் ஒரு மொந்தை குடிக்க ஆரம்பித்தான் ; 'ஒருமொந்தைக்கு மேல் குடிக்கமாட்டேன்' என்று கூறியவன் கள்ளுக்கடையையே காலி செய்துவிடும் நிலைமைக்கு வந்து விட்டான்! வீட்டிலே அவனுடைய மனைவி அடிவயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக்கொண்டு 'சிவனே' என்று உட்கார்ந்

திருந்தாள். தனக்கு என்று நல்லகாலம் 'விடியப் போகிறது' எனநினைத்து. நெற்றி வியர்வையைச் சிந்திப் பாடுபட்டுப் பெற்ற பணத்தையெல்லாம் கள்ளுக்காக தொலைத்தபின், மனைவியின் கழுத்தில் இருந்தவை எல்லாம் மார்வாடியின் கடையைச் சரணடைந்து, அங்கிருந்து கள்ளுக் கடைக்குச் சென்றன. எல்லாம் செலவழிந்தாகிவிட்டது. வேறு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை என்று அவனுக்குத் தெரியும். ஆம்; இப்போதுதான் அவனுக்குப் புத்திவந்தது. தவறினை உணர்ந்தான்......எப்படியோ கெஞ்சிப்பக்கத்து வீட்டுக்காரனிடமிருந்து கோடரியை வாங்கிக் கட்டைபிளக்கும் உத்யோகத்தைச் சிலகாலம் வகித்துவந்தான். தினமும் கோடரி கேட்டால் கொடுப்பார்களா? ஒருநாள் கொடுக்க மறுத்ததனால் இருவருக்கும் சண்டை வலுத்தது. 'பார்த்துக் கொள்கிறேன் ஒருகை', என்று கருவிவிட்டு வந்தான் கந்தசாமி.

எங்கும் இருட்டு. ஆற்றங்கரைக்குப் பக்கத்தில் ஓர் உருவம் மெல்ல மெல்ல அசைந்தாடிக்கொண்டு வந்தது..."ஆ, அதோ! ஐயோ!" என்ற குரல் கேட்டது. குத்திவிட்டு ஓடுகிறது, அந்த உருவம்—கந்தசாமிதான்! நேரே வீட்டிற்கு ஓடோடிவந்தான். தூங்கிக்கொண்டிருந்த வள்ளியை எழுப்பி "புறப்படு, புறப்படு" என்றான். "எங்கே?" என்றாள், தன் கணவனின் அலங்கோலத்தைக்கண்டு, பயத்துடன். "எங்கேன்னுகேட்கிறே? சனியனே, புறப்படுன்னு புறப்படேன்" என்று அவளைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு போனான். இந்தக் குழப்பத்தில் இரத்தம் தோய்ந்த அந்தக் கத்தியை வீட்டிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டான்!

பட்டினத்தை அடைந்தார்கள். 'இவ்வளவு பெரிய பட்டினத்தில் வேலைகிடைக்காமல் போய்விடுகிறதா?' என்

றெண்ணினர். வந்த இடத்தில் வேலை கிடைக்காமல் போய் விடவில்லை. ஆனால் அது சிறையில் கிடைத்தது! இவனைப் பற்றி எப்படியோ துப்பு அறிந்து கைதுசெய்து சிறைத் தண்டனையும் அளித்தனர்.

கந்தசாமியின் மனைவி எலும்பும்தோலுமாய்க் காட்சி அளித்தாள். நாலுநாட்கள் உண்ணாவிரதமிருந்தாலொழிய, ஐந்தாவது நாள் சாப்பிடமுடியாது......

நான்காண்டுகள் நகர்ந்தன. கந்தசாமி சிறையிலிருந்து விடுதலையானான், பல நோய்களுடன். சிறையிலிருந்து வெளி வந்ததும் மனிதன்தானா அல்லது எலும்புக்கூடா என்பது சந்தேகமாய்த் தோன்றியது. அவன் உடலிலிருந்த எலும் புகளை விரல்விட்டு எண்ணிவிடலாம் போலிருந்தது.

உண்மையில், அவனது இருண்ட பார்வையில் ஒருபுதிய ஒளியைத் தோற்றுவித்தது. தன் மனைவியை எண்ணிப் பார்த்தான்; எங்கிருக்கிறாள் என்று தேடவோ சக்தியில்லை. என் செய்வான்? நாகரிகத்தின் தலைநகரான சென்னையின் 'பிளாட்பாரம்' ஒன்றில் படுத்தான்; தன்னைமறந்து உறங்கி விட்டான். அவன் அங்கு படுத்துறங்குவதுகூட ஒரு 'புண் ணியவா'னுக்குப் பொறுக்கவில்லை போலும்!

'ஏய்யா, இங்கதானா படுக்க இடம் அம்புட்டுது? எந் திரிச்சி அப்பாலே போ!' என்றான், தன் அதிகாரத்தின் அடையாளமான தடியை வீசிக்கொண்டே.

படுக்க இடம் அதுவா? இல்லைதான். ஏழை, அவன் எங்கு போய்ப் படுப்பான்? மாடமாளிகையிலா? கூடகோபு ரத்திலா? ஏழடுக்கு மெத்தையிலா? அனைவரையும் ஆதி

ரிக்கும் ஆண்டவன் ஆலயத்திலா? அந்த ஆண்டவன் கோயி லில்தான் அவன் நுழையக் கூடாதே?......

மெல்ல எழுந்து ஒரு குறுகிய சந்தினுள் புகுந்தான். அங்கு ஒருவீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. வெளித் திண் ணையில் படுக்க இடமிருந்தது. திண்ணையின் அடியில் ஓர் அடுப்பும், சில பானைகளும் இருந்ததிலிருந்து யாரோ வசிக் கிறார்கள் என அறிந்து கொண்டான். திண்ணையின் ஓர மாகப் படுத்து உறங்கிவிட்டான்.

"யாரையா அது, இங்கு படுத்துக்கொண்டது?" என்ற குரல் கந்தசாமியின் தூக்கத்தைக் கலைத்தது. பதில் கூற முயன்றான். முடியவில்லை. வந்தவள் திண்ணைமீது ஏறி அவன் முகத்தைப் பார்த்தாள். 'ஆ, நீங்களா?' என்று திகைப்புடன் கூறினாள். அவள் யாருமில்லை. கந்தசாமி யின் மனைவிதான்! அந்தத் தெருவிற்குப் பக்கத்தில் ஒரு பெரிய வீட்டில் வேலை செய்து வந்தாள். கந்தசாமி தன் சிறை வாழ்க்கையைக் கூறினான். அவள் அளித்த உணவை உண்டான். ஆம், அந்த அன்புக் கரங்களால் படைத்த உணவை உண்டு எத்தனை நாட்கள் ஆயின?

இவன் வந்த அதிர்ஷ்டமோ என்னவோ, வள்ளி வேலை செய்துவந்த வீட்டார் உத்தியோக மாற்றம் காரணமாக வேறு ஊருக்குப் போய் விட்டனர். வேலை ஒன்றும் கிடைக்க வில்லை. தான் இத்தனை நாட்களாகச் சேமித்து வைத் திருந்த பணத்தைக் கொண்டு, வள்ளி சிறிது காலம் சமா ளித்து வந்தாள். 'பட்டகாலே படும்' என்பதைப் போல இவர்கள் குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் வந்துவிட்ட தால், அந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

தெரு பிளாட்பாரத்தில் தங்கள் குடும்பத்தைப் பதிவுசெய்து கொண்டனர்.

வள்ளி தெருவிலிருந்த இலை, இறகு, குப்பை முதலியவைகளைப் பொறுக்கி அடுப்பை மூட்டி ஒரு பானையில் சிறிது அரிசியைப் போட்டு அது வேவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'எய்யா! ரோட்லே படுக்காதேன்னு எத்தனை முறை சொல்றது? மூளையில்லே! எந்திரிச்சிப் போய்யா!' என்று கூறிய போலீஸ்காரனை ஓர் இரக்கப் பார்வை பார்த்தான் சந்தசாமி. 'எனக்கு வேறு வீடு எது?' என்று கூறுவது போலிருந்தது அந்தப் பார்வை. இவர்கள் போய் விடுவார்கள் என்று நினைத்துப் போலீஸ்காரன் போய்விட்டான்.

அரைமணி கழிந்தது. 'ஏ, பொம்பிளே! இங்கதானா அடுப்பு மூட்றது? ஜனங்க நடக்கிற இடத்திலே படுத்துட்டான்......' என்று சொல்லித் தன் பூட்ஸ் காலால் அடுப்பை உதைத்தான் புதிதாக வந்த 'ஹெட் கான்ஸ்டபிள்'......

அடுப்பு, அதன் மேலிருந்த பானை, அந்தப் பானையில் வெந்து கொண்டிருந்த அரிசி, அந்தச் சோற்றை நம்பி இருந்த இரண்டு உயிர்கள் — இவையெல்லாம் கதியற்றுப் போயின......யாரால்? பொதுமக்களின் நண்பனான போலீஸ்காரனின் பூட்ஸால்!!

அன்று முழுவதும் பட்டினி கிடந்தனர். கந்தசாமி தான் கிராமத்திலிருந்து வந்தது முதல் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான்...... அவன் தலை சுழன்றது.

எங்கும் ஒரே இருட்டு. இருட்டில் ஓர் உருவம் மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்தது. ஆம், கோயிலை நோக்கித் தான்! கோயில் வாசற்படியில் காலை வைத்தபோது கந்த சாமியின் கால்கள் நடுங்கின...... எப்படியோ மெதுவாய் நடந்து அம்மன் சந்நிதியை அடைந்தான்......அம்மன் சிலை மீது கையை வைத்தான்...மூக்கிலிருந்த' திருகைக் கழற்றிக் கொண்டு வெளிப் 'பிரகார'த்திற்கு வந்தான்...... உடம் பெல்லாம் வியர்த்து விட்டது. மயக்கமாக இருந்தது பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தான்.

கந்தசாமி கண்விழித்துப் பார்த்தபோது தான் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதை உணர்ந்தான். தான் செய்த குற்றம் என்ன வென்று நினைத்துப் பார்த்தான். அவன் சிற்றறிவுக்கு எட்டவில்லை! இவன் அம்மன் திருகைத் திருடி யதற்காகக் குற்றம் சாட்டப்படவில்லை. அகாலத்தில், கள் குடித்து விட்டுக் கோயிலில் விழுந்து கிடந்ததாகக் கைது செய்யப் பட்டான். பொழுது விடிந்ததும் கோயில் திருட்டு ஊரெங்கும் பரவிற்று. இவனை ஏனோ சோதித்துப் பார்த் தார்கள். அகப்பட்டுக் கொண்டான்.

வழக்கு நடந்தது. அவன்மீது இரு குற்றங்கள் சாட் டப்பட்டன. கோயிலுக்குள் நுழைந்தது ஒன்று; திருடியது மற்றொன்று.

"நான் திருடியது பாவமானால் நான் அம்மன்மீது கையை வைத்த போதே அம்மன் என்னைச் சபித்திருக்க வேண்டாமா? அம்மன் சபிக்காததால் நான் திருடியது குற்றமல்ல என்றுதானே ஆகிறது? நான் ஏன் திருடினேன்? மாடமாளிகை கட்டி வாழவா? கூடகோபுரம் கட்டி வாழ

வா? அரை சாண் வயிற்றைக் கழுவத்தானே! ஆண்டவன் என் குற்றத்திற்குத் தண்டனை அளிக்காத போது இவர்களுக்கு ஏன் அக்கவலை?" என்றெல்லாம் எண்ணியது அந்தப் பேதை உள்ளம். ஆனால் அந்த ஆண்டவனே குற்றம் செய்தாலும் கூட அவரையும் தண்டிக்கக் கூடியவர்கள் இந்த நீதிபதிகள் என்பது 'அவனுக்கு எப்படித் தெரியப் போகிறது.

அவனைத் 'திருடன்' என்றது சட்டம். அப்படியானால் அவன் வாழ்வைக் கெடுத்த போலீஸ்காரனுக்கு என்ன என்று பெயரளிப்பது?

ஏழை மக்களை வீடின்றி, வேலையின்றி திண்டாட வைக்கும் அரசாங்கத்திற்கு என்ன பெயரளிப்பது?

ஏழையின் குற்றத்தை மட்டும் கருத்தில் கொண்டு அதன் காரணங்களைக் கவனியாது தண்டித்த 'நீதிபதி'க்கு என்ன பெயர் அளிப்பது?

அவன் 'திருடன்'! அவன் மட்டும்தானா திருடன்? மற்றவர்களுக்கெல்லாம் என்ன பெயரோ?

பாமரனுக்கும் மார்க்ஸிசம்

ஜமதக்னி

கடந்த 1-8-47 இதழில் சமூக வர்க்கங்களின் வரலாற்றுச் சுருக்கத்தை முதலாளி வர்க்கத் தோற்றம் வரை குறித்தோம். இவ்விதழில் முதலாளிகளுக்கும் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட வர்க்கப் போரைப்பற்றியும் புதிய உற்பத்திக் கருவிகள் வர்க்கப் போருக்கு ஆக்கம் அளித்த விதத்தைப் பற்றியும் ஆராயலாம்.

பிரபுத்துவ சமூகத்திற்குள்ளேயே முதலாளி வர்க்கம் பிறந்து வளர்ந்துகொண்டிருந்தது; பொருளுற்பத்தியும் வியாபாரங்களும் முதலாளித்துவ அடிப்படையில் மளமளவென அபிவிருத்தியாய்க் கொண்டிருந்தன. முதலாளித்துவ வர்க்கம் வளர்வது பிரபுத்துவ அரசுக்கு முரணாக இருந்தது. போராட்டம் குமுறிக்கொண்டிருந்தது. முதலாளித்துவம் ஓரளவு வளர்ந்தபோதும் நகரங்களிலும் கிராமங்களிலும் பிரபுத்துவ வர்க்க ஆட்சி தானாக ஒழியவில்லை. மன்னராட்சியும் நிலப் பிரபுத்துவ ஆட்சியும் சர்ச்சுகள் ஆட்சியும் (Rule of the Church) சேர்ந்து தமக்கு விரோதமாக வளர்ந்து வருகிற புதிய முதலாளித்துவத்தைத் தமது நன்மைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முயன்றன. பிரபுக்களின் நிலங்களிலிருந்தும் விடுதலையடைந்து நகரங்களுக்கு அடிமைகள் ஓடினர்; பிரபுக்களுக்கு உழைப்பும் வரியும் செலுத்தும் நிர்ப்பந்தம் போய்விட்டது. விடுதலை பெற்ற அடிமைகளின் சந்ததிகள் சிலர் கொஞ்சம் செல்வந்தர்களாயினர்; செல்வம் வந்தபோது தமக்கு உண்மையான சுதந்திரம் இல்லை என்பதைக் கண்டனர்; மன்னருக்கும் பிரபுக்களுக்கும் எல்லா வித வரிகளும் செலுத்தவேண்டி இருந்தது. மன்னர்களும் பிரபுக்களும் உற்பத்தித் தொழில்களிலே பல தடைகளை விதித்தனர்; வியாபாரங்கள் தடைப்பட்டன. சரக்குகள் உற்பத்தி முதலாளிகள் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறவில்லை.

மன்னர்களும் பிரபுக்களும் அரசாங்க யந்திரத்தை வைத்திருந்தமையால் வியாபாரத்தைத் தடுக்க அவர்களால் முடிந்தது. சைனியம், நீதிபதிகள், சிறைகள், சட்டங்கள் இயற்றும் உரிமை எல்லாம் அவர்கள் வசம் இருந்தன; அதனால் அவர்கள் வியாபாரங்களையும் உற்பத்தித் தொழில்களையும் கட்டுப்படுத்த முடிந்தது. ஆதலின் புதிய முதலாளி வர்க்கம் முன்னேற வேண்டுமானால் புதிய வர்க்கப் போராட்டம் வளரவேண்டியிருந்தது. மன்னர்களுடனும் பிரபுக்களுடனும் முதலாளிகள் போராடவேண்டி இருந்தது. இவ் வர்க்கப் போராட்டம் பல நூற்றாண்டுகளாக நடைபெற்றது. பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள நாடுகளில் இன்னும் பிரபுத்துவத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் வர்க்கப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தியாவிலும் ஓர் சிக்கலான வர்க்கப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதுவரை வெளி முதலாளித்துவ-ஏகாதிபத்திய அரசை எதிர்த்துச் சுதந்திரப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பிரபுத்துவத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்து ஆங்காங்கே வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுதேச சமஸ்தான அரசுகளுக்கும் மக்களுக்கும் போர்கள் நடைபெறுகின்றன ; ஜமீன்தார்களையும் பெரிய நிலச்சுவான்தார்களையும் எதிர்த்துச் சுரண்டப்பட்ட விவசாய மக்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். பேராசை பிடித்த முதலாளிகளுக்கும் அரசியல் ஆதிக்கம் சம்பாதிக்கக் கிளர்ந்து கொண்டிருக்கும் பாட்டாளி மக்களுக்கும் கொடிய போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் பிரபுத்துவத்தை எதிர்த்த முதலாளிவர்க்கப் போராட்டம் முற்றுப் பெற்றுவிட்டது.

ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டங்கள் மூலமாக முதலாளி வர்க்கம் பிரபுக்கள் வர்க்கத்தினிடமிருந்து அரசாங்க யந்திரத்தைக் கைப்பற்றியது. பிரிட்டனில் பிரபுத்துவத்தைத் தாக்கும் முதலாளி வர்க்கப் போர் இதர நாடுகளைக் காட்டினும் முன்னதாகவே ஆரம்பமாகிவிட்டது. 17-ஆம் நூற்றாண்டின் மத்தியிலே பிரபுத்துவ அர

சாங்கம் விதித்த வரிகளை முதலாளி வர்க்கம் எதிர்க்கும் கடுமையான போர் உச்சநிலை அடைந்துவிட்டது. அரசாங்கம் விதித்த தடைகளினால் சரக்கு உற்பத்தி செய்யும் தொழில் ஸ்தாபனங்கள் முன்னேற முடியவில்லை. மன்னனுக்கு மனுப்போடுதல், வரி மறுத்தல் முதலிய சமாதான முறைகளினால் முதலாளிகள் அரசாங்கக் கட்டுப்பாடுகளை அகற்ற முயன்றனர். ஆனால் அரசாங்க யந்திரத்தை வளைக்க முடியவில்லை. ஆதலின் பலாத்காரத்தைப் பலாத்காரம் கொண்டே எதிர்க்க முதலாளிகள் முடிவு செய்தனர். உற்பத்தித் தடைகள், வியாபாரத் தடைகள், பிரபுத்துவ சுவர்களை இடிக்கும் முயற்சிகளுக்கு நீதிபதிகள் விதித்த கொடிய தண்டனைகள், சிறைவாசங்கள் யாவற்றையும் எதிர்த்துத் தவிடுபொடி யாக்குமாறு முதலாளிகள் பொது ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள். ஆதலின், முதலாளிகள் பொதுஜனப் புரட்சியைத் தூண்டினர்; ஆயுதந் தாங்கிய புரட்சிச் சக்திகளைக் கிளப்பினர்; அவற்றிற்குத் தலைமை தாங்கினர்; பழைய கொடுங்கோல் ஆட்சியைத் தூளாக்க எல்லாவித முறைகளையும் கையாண்டனர்; முக்கியமாகச் சைனியந் திரட்டினர். இவ்வளவுஞ் செய்த பிறகே முதலாளி வர்க்கம் தன்னை ஆளும் வர்க்கமாக அமைத்துக்கொள்ள முடிந்தது. சரக்கு உற்பத்தி, வியாபாரம் முதலியவற்றின்மீதிருந்த தடைகளை உடைத்தெறிய முடிந்தது. தனது வர்க்க நலன்களுக்கு ஏற்ற முதலாளித்துவ அரசாங்க அமைப்புகளையும் சட்டங்களையும் இயற்றிக்கொள்ள முடிந்தது.

ஆனால், பிரிட்டனில் இப் போராட்டம் சரித்திரங்களிலே வேறு விதமாக வர்ணிக்கப்படுகின்றது. பிரிட்டனில் நடந்த முதலாளி போராட்டம் முதல் சார்லஸ் மன்னனை எதிர்த்த போராட்டமாகக் காட்டப்படுகின்றது. மன்னன் கொடுங்கோலன்; ரோமன் கத்தோலிக்க மதச் சார்பு கொண்டவன்; மக்கள் இதை விரும்பவில்லை; புரட்சித் தலைவனாகிய கிராம்வெல் கத்தோலிக்க மதத்தை எதிர்ப்பவன்; மரியாதை உள்ள கனவான்; பிரிட்டிஷ் மக்களின் சுதந்திரத்தில் பற்றுடையவன். ஒழுக்கத்தை நாட்டவும் மக்களின் மத உரிமைகளைப் பாதுகாக்கவுமே போராட்டம் நடைபெற்றது என்று சரித்திராசிரி

யர்கள் வருணிக்கின்றனர். போரில் ஈடுபட்ட தன் மைந்தர்களையும் யுத்த கோஷங்களையும் மட்டும் பிரமாதப் படுத்துகின்றார்கள். ஆனால் மார்க்ஸிசம் சரித்திரத்தில் இன்னும் ஆழமாக முழுகிப் பார்க்கின்றது; போராட்டத்தின் சாரத்தைக் கண்டு பிடிக்கின்றது; பழைய பிற் போக்கான பிரபுத்துவ வர்க்கத்தின் இடமிருந்து அதிகாரத்தை அபகரிக்க எழுந்த புதிய முதலாளி வர்க்கத்தின் போராட்டம் அது என்று நிரூபிக்கின்றது. கிராம்வெல் புரட்சியும் பின்னர் பிரிட்டனில் 1689-ல் ஏற்பட்ட புரட்சியும் அரசாங்க நிருவாகத்தில் முதலாளிவர்க்கம் கணிசமான அதிகாரத்தைப் பெற்றது. எனினும் முதலாளித்துவ வெற்றி பிரிட்டனில் பூரணமாகவில்லை; அதனால் பல நிலப் பிரபுக்கள் தப்பிப் பிழைத்துப் பிற்காலத்தில் தாமே முதலாளி வர்க்கத்தில் இயைந்துவிட்டனர். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளாகப் பிரிட்டனின் பண விஷயத்தில் பங்கு கொண்டவராய் அரசாங்கத்திலும் பங்கு எடுத்துக்கொண்டனர்.

பிரான்ஸில் முதலாளித்துவ வர்க்கப்போர் பிரிட்டனைக் காட்டிலும் தாமதித்து ஏற்பட்டது. 1789-ல் முதலாளித்துவப் புரட்சி வெடித்தது. ரூசோவும் இதர எழுத்தாளர்களும் மனித உரிமையைப்பற்றி எழுதியதாலும் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற புரட்சிக் கோஷங்களால் புரட்சி வெடித்தது என்று மார்க்ஸிசம் கருதுவதில்லை. பிரிட்டனிலே கிராம்வெல் புரட்சியில் உயிராக இருந்தது மனித உரிமைகள் அல்ல; ஒழுக்க உரிமைகளும் அல்ல; வளர்ந்துவரும் முதலாளித்துவ வர்க்கம் அரசாங்க அதிகாரத்தைப் பற்ற விரும்பியது யார் என்பதை மார்க்ஸிசம் கண்டது. அதைப்போல 1789 பிரஞ்சுப் புரட்சியில் உயிராக இருந்தது, கொடியில் பொறித்திருந்த பொதுக் கொள்கைகள், நீதிகள் அல்ல; வளர்ந்து வந்துகொண்டிருந்த முதலாளி வர்க்கம் பிசாசுத் தன்மை பொருந்திய பிரபுத்துவத்தினிடமிருந்து அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றித் தனது வர்த்தகம், சரக்கு உற்பத்தித் தொழில்கள் சரமாரியாக வளர்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்டது. இதையே பிரஞ்சுப் புரட்சியில் மார்க்ஸிசம் தெளிவாகக் காண்கிறது.

"ஒருவன் வெளியிடும் அபிப்பிராயத்தைக் கொண்டு மட்டும் அவன்இயல்பை நிர்ணயிக்க முடியாது. அதுபோலவே புரட்சி நடத்து வோரின் கோஷங்களைக் கொண்டுமட்டும் அப்புரட்சிப் பருவத்தின் தன்மையை நிர்ணயிக்க முடியாது" என்றார் காரல் மார்க்ஸ். ஓர் புரட்சிப் பருவத்தை அர்த்தம் செய்து கொள்வதற்கு ஓர் முக்கியமான விஷயம் உண்டு; வர்க்க நலன்களுக்கும் வர்க்க அதிகாரத்திற்கும் நேரடியாகச் சம்பந்தம் இல்லாத விஷயங்களைப் புதிய வர்க்கத்தின் தலைவர்கள் சொல்வார்கள்; வர்க்கப் போருக்குச் சம்பந்தமில்லாத பொதுக் கொள்கைகளையும், கோஷங்களையும் நீதிகளையும் தெரிந்தோ தெரியாமலோ சொல்வார்கள்; இருப்பினும் ஜாக்கிரதை யாகப் புரட்சிப் பருவத்தை ஆராய்ந்தால் பழைய வர்க்க ஆட்சியை ஒழிக்கப் புதியதோர் வர்க்கம் கிளம்புகிறது என்ற விஷயம் தெளி வாகிவிடும். பழைய வர்க்க ஆட்சியை ஒழித்துப் புதிய வர்க்கம் தன் ஆட்சியை ஏற்படுத்தச் செய்யும் போராட்டமே புரட்சி என்பதை நாம் உணர வேண்டும்.

சரித்திரத்தை மார்க்ஸிசம் ஆராயப் புகுந்தால் ஓர் மறுக்க முடியாத உண்மையைக் காண்கிறது.

நேரெதிரான வர்க்கங்கள் ஈடுபடும் போராட்டங்களே மனித சமூக வளர்ச்சிக்கு முக்கியமான தூண்டுகோலாக இருக்கின்றது. இது வெறும் கற்பனை அன்று; சரித்திர உண்மை. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னே பண்டை நாகரிகச் சமூகமானது அடிமை களின் உழைப்பின்மீது கட்டப்பட்டிருந்தது. அடிமைக்கும் எசமானனுக்கும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே கல்வி, கலை, நாகரிகம், தத்துவம் முதலியன முன்னேறின. அடிமைகள் உழைக்க அவர்கள் உழைப்புப் பலனை உண்டு ஜீவித்திருந்த ஓய்வு பெற்ற கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் கலை, கவிதை, இலக்கி யம், விஞ்ஞானம், தத்துவம் இயற்றினர். ஆதலின் சமூகத்திலே வர்க்கப் போராட்டம் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக இருக் கின்றது. முதலாளி வர்க்கத்திற்கும் பழைய பிரபுத்துவ வர்க்கத்

திற்கும் இடையே கொடிய போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே இயற்கை விஞ்ஞானங்கள் முன்னேறின. இயற்கை மீது மனிதனின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டிருந்தது. மனிதன் தன் வாழ்வுக்கு வேண்டிய சரக்குகளை உற்பத்தி செய்வதில் மனித சக்தி முன்னேறிக் கொண்டிருந்தது. முதலாளி வர்க்கம் கிளம்புவதற்கு முன்னே மனித இயக்க சக்தியும் மிருக இயக்க சக்தியுந் தான் (Man power, Animal power) பொருள் உற்பத்தியில் இருந்தன. மனிதன் ரிக்ஷா இழுத்தல், யந்திரத்தைச் சுற்றல் முதலியன மனித சக்தி; வண்டியை மாடு இழுத்தல், குதிரையானது இரதம் இழுத்தல் முதலியன மிருக இயக்க சக்தி. முதலாளித்துவ வர்க்கம் தோன்றிய பிறகு வேறு இயக்க சக்திகள் கண்டுபிடிக்கப்பட்டன. காற்று, வெள்ளம், நீராவி, மின்சாரம் முதலியவை இயந்திரங்களை இயக்கும் சக்தி வாய்ந்தவை. அணுச் சக்தியும் பிற்காலத்தில் மகத்தானதோர் இயந்திர இயக்க சக்தியாகும் என்று நம்பப்படுகிறது. இவற்றினால் இயக்கப்படும் இயந்திரங்கள் அதிக வேலைசெய்ய முடியும். இவற்றை இயற்கை சக்திகள் எனலாம். அதோடு உற்பத்தி செய்வோர் வசம் இருந்த சிறந்த கருவிகளை அழித்தது முதலாளி வர்க்கம். நூற்போன் இராட்டையை இழந்தான்; நெய்தவன் கைத்தறியை இழந்தான். காரணம் என்னவென்றால் இயற்கை இயக்க சக்தியால் ஓட்டப்படும் யந்திரக் கருவியிலே ஒரு தொழிலாளி ஒரு நாளில் குடிசைத் தொழிலாளியைக் காட்டிலும அதிக சாமான்களை உற்பத்தி செய்ய முடியும். யந்திரத்தில் உற்பத்தி செய்யும் முறையோடு தனிக் குடிசைத் தொழிலாளர் போட்டியிட முடியாது. கருவிகளைத் தமக்குச் சொந்தமாக வைத்திருந்த குடிசைத் தொழிலாளிகள் இடத்திலே இரண்டு புதிய வர்க்கத்தார் தோன்றினர். (1) யந்திரக் கருவிகளைச் சொந்தமாக வைத்திருந்த முதலாளிகள்; அவர்கள் மட்டும் யந்திரங்களில் வேலை செய்வதில்லை (2) ஆலைத் தொழிலாளிகள் அவர்கள் வசம் உற்பத்திக் கருவிகள் கிடையாது; முதலாளி சொந்தமாக வைத்திருந்த யந்திரக் கருவிகளில் இவர்களே வேலை செய்தனர்; சம்பளத்திற்காக இவர்கள் உழைத்தனர்.

இந்தச் சமூக மாறுதல் யாரும் திட்டமிடாமலேயே யாருடைய உணர்விலும் படாமலேயே ஏற்பட்டு உருவாய்க் கொண்டிருந்தது. ஒரு சிலர் உற்பத்தித் துறையில் கண்டுபிடித்த புதிய உற்பத்தி முறைகளைச் சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழில்களில் ஈடுபடுத்தினார்கள். தம்முடைய சொந்த இலாபத்திற்காகவே புதிய இயந்திரக் கருவிகளை புகுத்தினார்கள். தாம் புகுத்திய புதிய உற்பத்திக் கருவிகளால் மேற்சொன்ன சமூக மாறுதல்கள் ஏற்படும் என்று முற்கூட்டி அறியவில்லை; அறிய விரும்பவும் இல்லை. ஆனால் அவர்களுடைய புது யந்திரக் கருவிகள் சொத்துடைய முதலாளி வர்க்கமாகவும் சொத்தற்ற ஆலைத் தொழிலாளி வர்க்கமாகவும் சமூகத்தில் பிரிவினையைத் தவிர்க்க முடியாதபடி செய்துவிட்டன. மனித சமூக மாறுதல்கள் எல்லாம் அதுவரை திட்டம் இடாமலேயே யாருக்கும் முன்னதாக உணர்வில்லாமலேயே ஏற்பட்டிருக்கின்றன; மனிதன் படிப்படியாக அறிவை அபிவிருத்தி செய்து கொண்டிருந்தான். புதிதாகச் சம்பாதித்த அறிவை உற்பத்தித் துறைகளில் புகுத்தியவண்ணமே இருந்தான்; அதனால் பெரிய சமூக மாறுதல்கள் ஏற்பட்டன என்று கார்ல் மார்க்ஸ் கூறுகின்றார். இந்தச் சமூக மாறுதல்களும் சொத்துடையோர் சொத்து அற்றோர் என்ற சமூகப் பிரிவினைகளும் வரவர வர்க்கப் போராட்டங்களில் சென்று முடிகின்றன; உண்மையில் வர்க்கப் போராட்டங்களாக இருப்பினும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அவை மதம், பார்லிமெண்ட், நீதி முதலிய கருத்துக்களின் போராட்டமாகவும், ஸ்தாபனங்களின் போராட்டமாகவும் காணப்பட்டன. ஏன் என்றால், பழைய வர்க்கத்தின் கருத்துகளும் ஸ்தாபனங்களும் புதிய வர்க்கம் விரும்புகிற கருத்துகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் நேர்விரோதமாக இருந்தன. பழைய வர்க்க ஆட்சியின் கருத்துகள், ஸ்தாபனங்கள் புதிய வர்க்க வளர்ச்சிக்குப் பெருந் தடையாக இருந்தன. அதனால் அவற்றை எதிர்த்துத் தூளாக்கித் தன் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கும் கருத்துக்களையும் ஸ்தாபனங்களையும் நிர்மாணிக்க புதிய வர்க்கம் விரும்புகிறது.

வேங்கடத்தை விடமாட்டோம்!

ம. பொ. சி.

[கடந்த 19-8-47-ல் திருப்பதியில் நடைபெற்ற தமிழர் கூட்டத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. பேசியதன் சுருக்கம்]

வேங்கடத்துக்கு வரவேண்டுமென்ற 'பிரார்த்தனை' நெடுநாளாக உண்டு. கைவிட்டுப்போனதாகக் கருதப்படும் திருப்பதி மலையை—தமிழகத்தின் வடக்கெல்லையைத் திரும்பவும் கைப்பற்றித் தீருவதென்பதே அப் பிரார்த்தனை. அது நிறைவேறும் காலம் நெருங்கிவிட்டதனாலேயே நான் இங்கு வந்துள்ளேன். நான்மட்டும் வரவில்லை. தமிழரசுக் கழகப் படையொன்றும் என்னுடன் வந்துள்ளது. அப் படை ஆயுதம் கொண்டுவரவில்லை; அன்புகொண்டே வந்திருக்கின்றது. வம்பு சண்டைக்கு வரவில்லை; வரலாற்றின் வாய்மையை உணர்த்தவே வந்துள்ளது. அதுவும் ஆந்திரத் தோழர்களுக்கல்ல; தமிழர்களுக்கு—சூழ்நிலையால் தெலுங்கு படிக்கும் தமிழர்களுக்கு—அவர்களது தாயகத்தின் எல்லை இதுவென எடுத்துக் காட்டி, அதைக் காப்பாற்றும் கடமையை உணர்த்துவதற்காகவே ஓடிவந்தோம்.

இங்கு கூடியுள்ளவர்களில் ஒரு சில ஆந்திரத் தோழர்கள் நம்மீது ஆத்திரப்படுகின்றனர். அவர்கள் ஆத்திரப்படும் அளவுக்கு நாம் குற்றமொன்றும் செய்துவிடவில்லை. ஆந்திரர் வேறு, தமிழர் வேறு என்று கூட இதுவரை நாம் எண்ணியதேயில்லை. அரசாங்க நிருவாகத்திலும் சரி, ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய சுதந்திரப் போரிலும் சரி ஆந்திர மக்களோடு நாம் கைகோர்த்துக் கடமையைச் செய்

தோம். ஆனால், அன்றும் சரி, இன்றும் சரி, ஆந்திரர்கள் தாங்கள் ஒரு தனி இனத்தவர் என்ற உணர்ச்சியுடனேயே இருந்து வருகின்றனர். அந்த இன உணர்ச்சி—தமிழருக்கு எதிரான உணர்ச்சியாகவும் மாறிவிட்டது. அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே யொழிய குறையவில்லை,

ஆந்திரரின் போர் முரசு

தமிழகத்தினின்று பிரித்து ஆந்திரத்தைத் தனி மாகாணம் ஆக்கவேண்டுமென்ற கிளர்ச்சியை ஆந்திரரே துவக்கினர். 'எங்களை விட்டு விலகிப் போங்கள்!' என்று எந்தத் தமிழனும் ஆந்திரர்களுக்கு ஆணையிட்டதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கிடையில் ஆந்திரர்—தமிழர் என்று இனம் பிரிப்பதும், லாப நஷ்டக் கணக்குப் பார்த்துச் சண்டை போடுவதும், எல்லைக் கிளர்ச்சிக்கு இடமளிப்பதும் சுதந்திரப் போரின் ஐக்கிய முன்னணியைச் சிதைத்துவிடும் என்று தமிழர் அஞ்சினர். தமிழரின் இந்த நேர்மைக் குணத்தை, ஒற்றுமை உணர்ச்சியை, சகிப்புத் தன்மையை ஆந்திரர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டனர். ஆந்திர மாகாணப் பிரிவினைக்குத் தமிழர்களே முட்டுக்கட்டை போடுவதாக ஆந்திர நாட்டின் மூலை முடுக்குகளி லெல்லாம் பிரசாரம் செய்தனர். தமிழ்த் தலைவர்கள்மீது வசைமாரி பெய்தனர். தெலுங்கு பத்திரிகைகளும் இந்தப் பொய்ப் பிரசாரத்தில் பூரணமாகப் பங்கு கொண்டன. தமிழர் நுழையாத இடத்தில், தமிழருக்குப் புரியாத மொழியில் இந்தப் பிரசாரம் நடைபெற்றுவந்தது.

பந்தாடும் விஜயா முதல், பண்ணை ஜமீந்தார்வரை, சட்ட நிபுணர் அல்லாடி முதல் சமய வேதாந்தி ராதாகிருஷ்ணன் வரை, பார்ப்பன எதிரி பொப்பிலி அரசர் முதல் பார்ப்

பணப் பெரியார் பட்டாபிவரை எல்லோரும் ஆந்திர மகா சபையின் நிழலில் ஐக்கிய முன்னணி வகுத்து 'சித்தூரையும் சேர்த்து ஆந்திர மாகாணத்தை அமைத்தே தீருவோம்' என்று போர் முரசு கொட்டுகின்றனர். இதன் எதிரொலியே தமிழரின் விழிப்பு.

தமிழரின் விழிப்பைக் கண்டு ஆந்திரர் ஆத்திரப்படுவதில் பயனில்லை. வேற்றுமை வித்தை விதைத்தவர்கள் அதன் விபரீதத்தையும் அனுபவித்தே தீரவேண்டும். கோர்ட்டில் வழக்கைத் தாக்கல் செய்தவர், எதிர்க்கட்சி மட்டும் கோர்ட்டில் ஆஜராகி எதிர்வாதம் செய்யக்கூடாதென்று சொல்லுவது நீதியாகுமா? ஆந்திரர் சென்னையும், செங்கல்பட்டும் சித்தூரும் தமதென்கின்றனர்; தமிழராகிய நாம் அந்த ஜில்லாக்களை நமதென்கிறோம். அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொது மக்களே இந்த வழக்கைத் தீர்க்கும் நீதிபதிகள். அவர்களிடை நமது கட்சியைச் சொல்லுவோம்.

'பிரசாரமே வேண்டாம்; எல்லையைப்பற்றிய பிரச்சினையை இனி வரவிருக்கும் எல்லைக் கமிஷனுக்கு விட்டுவிடலாம்' என்று சிலர் கூறுகின்றனர். இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். முதலில் பிரகாசம் டங்கடூரில் குந்தி வாய் மூடி ஓய்வு கொள்ளட்டும். அவரது தோழர்களுக்கும் அப்படியே நடக்கும்படி அவர் ஆணையிடட்டும். பிறகு நானும் எனது தோழர்களும் சித்தூர் வருவதை விடுத்து சென்னையிலேயே நின்று வேறு துறைகளில் பணி புரிவோம். இனியும் ஆந்திரர்கள் கேட்பாரற்ற நிலையில்—தமிழரைக் கேவலப்படுத்த—தமிழரின் நிலத்தைப் பறிக்க—தமிழரசுக் கழகத்தார் விட்டு வைக்கப் போவதில்லை. சென்னை நகரில் ஆந்திரர்களின் பிரசாரம் வரவர அதிகரித்துவிட்டது. ஆட்களை

இறக்குமதி செய்து ஆந்திரரின் எண்ணிக்கையைப் பெருக்குவதும் அன்றாடக் காட்சியாகிவிட்டது. காந்தியடிகள் பெயரால்—காங்கிரஸின் பெயரால்—சுதந்திரத் திருநாளின் பெயரால்—கூட்டம் போட்டு, அசோக தர்ம சக்கரம் பொறித்த மூவர்ணக் கொடியின்கீழ் நின்று தமிழரைப் பழித்தும், தமிழ் நிலத்தைப் பறிக்கவும் பேசுவதை இனியும் அனுமதிக்க முடியாது.

சித்தூர் ஜில்லா முழுவதும் தங்களுடையதே என்று ஆந்திரர் தாமே தீர்ப்பு செய்து கொண்டனர் போலும்! அதனால்தான் செங்கல்பட்டையும் சென்னையையும் கேட்கின்றனர். செங்கல்பட்டு முழுவதும் என்கிறார் ஒருவர். இல்லை இல்லை, நெல்லூருக்கும் சென்னைக்கும் மத்தியில் காரிடார் (இடை நிலம்) தந்தால் போதும் என்கிறார் இன்னொரு ஆந்திரத் தலைவர். ஆம். ஹிட்லரை பாஸிஸப் பாவி என்று பழித்த அதே தேச பக்தர்களின் திருவாய்கள்தான் இன்று ஹிட்லரின் காரிடார் தத்துவத்தைக் கோஷிக்கின்றன.

சென்னை நகரம் எந்த நாட்டில் சேருகிறதோ அந்த நாட்டோடுதான் சேருவோம் என்று சித்தூரிலுள்ள செல்வாக்கு பெற்றவர்கள் சொல்லுகின்றனர். இதை நானே கேட்டேன். சென்னை நகரம் வாணிபத்திலும் தொழிலிலும் வளம்பெற்று விளங்குவதோடு, சித்தூருக்கு அருகிலுள்ள தலைநகரமாகவும் இருக்கிறது. ஆந்திர நாட்டின் தலைநகர் அவ்வளவு அருகில் இருக்காது. மேலும் சித்தூர் மக்களுக்கு வாணிபம், தொழில் முதலியவை தவிர வேறு வகையில் வடக்கே உறவுகொள்ள வழியில்லை ஆகவேதான் அவர்கள் சென்னையைப்பற்றிக் கவலைப்படுகின்றனர். ஆந்திரர்கள் அநீதியான முறையில் சென்னையைக்

கேட்பதற்கு சென்னை இல்லையானால் சித்தூரும் ஆந்திரத்தோடு சேராது என்ற பயம்போலும்! சித்தூர் மக்களுக்கு நாம் சொல்வது இதுதான்: சென்னை நகரம் ஒருநாளும் ஆந்திரத்தோடு சேராது. அங்கு வாழும் மக்கள் 8 லட்சம். அவர்களில் தெலுங்கு பேசுவோர் ஒன்றேகால் லட்சம் தான். அவர்களிலும் தமிழரோடு தமிழராகக் கலந்து வாழும் தெலுங்கர்களே அதிகம். இந் நிலையில் சென்னை நகரத்தை ஆந்திரத்தோடு சேர்த்துக்கொள்ளலாம் என்று ஆந்திரர் எண்ணுவது பகற்கனவேயாகும். சென்னப்ப நாயக்கன் ஆண்ட ஆதாரத்தைக்கொண்டு கேட்பார்களானால் தமிழர்களாகிய நாமும் தமிழ் மன்னர்களாண்ட ஆதாரத்தைக் காட்டி துங்கபத்திரா வரையில் கேட்க நியாயமுண்டு. ஆனால் நாம் கேட்கப்போவதில்லை. அவர்கள் கேட்கும் சென்னையையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, சென்னை பறிபோகுமோ என்ற பயம் சித்தூர் மக்களுக்கு வேண்டியதில்லை. நீங்கள் திருப்பதி மலையை இழக்காதிருக்க இன்று முதல் பாடுபடுங்கள்.

தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலை என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பனம்பாரனார் கண்ணால் கண்டகாட்சி. அன்றுமுதல் பாரதியார் காலம்வரை தோன்றிய இலக்கியங்களில் இதை வழிவழியாகப் புலவர் பெருமக்கள் பலர் வற்புறுத்தி வந்த வரலாறு.

என்னருமைத் தமிழ் மக்களே! நம் முன்னோர் மண்ணை வைத்து மனைகோலவில்லை; கல்லை நட்டுக் காவல் வைக்கவில்லை. ஏனெனில், அவை நாட்டின் எல்லையைக் காக்கும் நல்ல அரணாக இருக்கமாட்டா. பக்கத்து நாட்டார்—பகை நாட்டார்—மண்ணைக் கடந்து மனையைத் திரு

டலாம். கல்லைப் பிடுங்கி காவலை அழிக்கலாம். ஆகவே தமிழகத்தின் வடக்கெல்லையில் இயற்கை அருளிய மலையை வைத்து மனமகிழ்ந்தனர். வேங்கடமலை ஒரு சிறு குன்றமல்ல. பல மைல்கள் நீண்டும் பருத்தும் அமைந்துள்ள தொடர்மலை.

'மலைபோன்ற உண்மை' என்பது தமிழ்ப் பழமொழி. தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடம்தான் என்ற உண்மை மலைபோன்றதல்ல. மலையாகவே நின்று காட்டும் மாபெரும் உண்மை. ஆனால் நமது ஆந்திரத் தலைவர்கள் மலைவிழுங்கி மகாதேவன்களாக ஆகப் பார்க்கின்றனர். சித்தூர் ஜில்லாவில் மதனபள்ளி, வாயல்பாடி, என்ற இரு தாலுக்காக்கள் நீங்கலாக, திருப்பதி, திருத்தணி, புத்தூர், திருக்காளத்தி, சித்தூர், புங்கனூர், சந்திரகிரி, பலமனேரி ஆகிய தாலுக்காக்கள் அல்லது பிரதேசங்கள் தமிழகத்தைச் சேர்ந்ததே ஆகும். இதில் திருப்பதியும் அதை அடுத்துள்ள ஒன்றிரண்டு பிரதேசங்களும் தவிர மற்ற தாலுக்காக்களில் 1941-ம் ஆண்டு ஜனக்கணக்குப்படி ஐயத்துக்கிடமின்றி தமிழ் மக்களின் தொகையே அதிகமாக இருக்கின்றது.

அது மட்டுமல்ல, அந்த தாலுக்காக்கள் செங்கல்பட்டு, வடஆற்காடு ஆகிய தமிழ் ஜில்லாக்களைச் சேர்ந்தாற்போலும் இருக்கின்றன. அப்படி இருந்தும் ஆந்திரர்கள் சித்தூர் ஜில்லா முழுவதும் ஆந்திர நாட்டோடு சேர்ந்ததென்றே பேசுகின்றனர்; எழுதுகின்றனர்; படம் போட்டும் காட்டுகின்றனர். 'சென்னை நகரம் தமிழர்களுடையதே' என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் ஆந்திரப் பொதுவுடைமைக் கட்சியினர் வெளியிட்டுள்ள 'விசால ஆந்திரா' என்ற நூலில்

கூட சித்தூர் ஜில்லா முழுவதையும் ஆந்திர நாட்டோடு சேர்த்தே குறிப்பிட்டுள்ளனர்.

தமிழரசுக் கழகத்தார் சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ்த் தாலுக்காக்களை மட்டும்தான் கேட்கின்றனர். அதுவும் பனம்பாரனாரும் பாரதியாரும் பாடிவிட்டார்கள் என்பதற்காக அல்ல; தமிழ் இலக்கிய ஏடுகளில் சான்று இருக்கிறது என்பதற்காகவும் அல்ல; அவை எல்லாவற்றையும்விட 1911ம் ஆண்டுவரை திருப்பதிமலை தமிழகத்தோடு இணைந்தே இருந்தது—இதை சென்னை அரசாங்க ஏடுகளும் கூறுகின்றன என்ற உறுதியினாலேயே யாகும்.

இலக்கியச் சான்று, வரலாறு போதிக்கும் வாய்மை, அரசாங்க ஏடுகள் காட்டும் ஆதாரம், ஆகியவற்றை மறைத்துப்பேசி திருப்பதியைத் திருப்பிக் கொடுக்க ஆந்திரர்கள் மறுப்பதாலேயே நானும் எனது தோழர்களும் இங்கு சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. சித்தூர் ஜில்லாவில் எங்கள் பிரசாரம் இதோடு முடிந்துவிடாது. இனியும் தொடர்ந்து நடக்கும். ஆந்திர—தமிழ் தலைவர்கள் தங்களுக்குள்ளே கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரும் நிலைமை ஏற்படுமானால் பிரசாரத்தை நிறுத்திக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அதுவரை எங்கள் போர் முரசுப் பேரொலி சென்னையிலும் சித்தூரிலுமுள்ள ஒவ்வொரு தமிழரின் காதுகளிலும் ஒலிக்கச் செய்வோம்.

திருப்பதியிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் தெலுங்கு பேசுவதால் அந்தப் பிரதேசங்கள் தமிழருக்குரியவை ஆகா என வாதிடப்படுகிறது. இது ஆராயத்தக்கதே. ஆந்திரமும்

இன உணர்ச்சியுமின்றி நடுநிலைமையோடு ஆராய்வோம். நீதிக்குப் புறம்பாக, மக்களோடு மக்கள் சேர்ந்து வாழும் சமரச நெறிக்குப் பாதகமாக ஒரு அங்குல நிலம்கூட எங்களுக்குத் தேவையில்லை.

மேற்சொன்ன பகுதிகளில் வாழும் மக்களில் மிகப் பெரும்பாலோர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழையன்றி வேறு மொழியைப் பேசவோ படிக்கவோ அறிந்ததில்லை. ஆனால் பிற்காலத்தில் அவர்கள் தெலுங்கு மொழியை எழுதப் படிக்க கற்றுக்கொண்டனர். சூழ்நிலை தெலுங்கு மொழியைக் கற்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தியது. 1911க்குப் பிறகு தமிழ்—ஆந்திர தாலுக்காக்களைக் கொண்டு சித்தூர் ஜில்லாவை உருவாக்கி அதை ஆந்திர மாகாணத்தோடு உறவு கொள்ளும்படி செய்து வைத்ததால் அங்கு ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக தெலுங்கு மொழி ஆதிக்கம் பெறலாயிற்று. சித்தூர் ஜில்லாவிலுள்ள அரசாங்க-ஸ்தல ஸ்தாபன அலுவலகங்களில் வேலை பெறவேண்டுமானால் தெலுங்கு மொழி தெரிந்திருக்கவேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டது. இதனால்தான் தமிழர் தெலுங்கு கற்றனர். மேலும், ஆங்கிலேயர் மாகாணங்களில் இரட்டையாட்சியை அமுல் நடத்திய காலத்தில் பனகல் அரசர், முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர் போன்ற ஆந்திரர்களே ஒருவர்பின் ஒருவராக சென்னை அரசாங்கத்தின் தலைமை அமைச்சராக வந்ததும் சித்தூரில் தெலுங்கு ஆதிக்கம்பெறக் காரணமாயிற்று. இதனால் அங்குள்ள தமிழ்ப் பள்ளிகள் ஆண்டுதோறும் குறைந்து கொண்டேவந்து பின்னர் அடியோடு மறைந்தே விட்டது.

திருப்பதியிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மக்கள் படிக்கும் மொழி தெலுங்கு என்றாலும் ஆந்திரர்களோடு பேசும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தமிழே பேசுகின்றனர். இந்தக் கூட்டத்தில் கூடியுள்ள பெருவாரியான தெலுங்கறிந்த தமிழர்களாகிய நீங்கள் எனது சொற்பொழிவை நன்கு புரிந்துகொள்வதே அதற்குத் தக்க சான்று. எனவே, தமிழகத்தின் வடக்கெல்லையாகிய திருப்பதி தாலுக்காவில் தெலுங்கையே தாய் மொழியாகக் கொண்ட ஆந்திரர்களின் தொகையைவிட தமிழைத் தாய் மொழியாகவும், தமிழகத்தைத் தாயகமாகவும், தமிழினத்தை உறவினமாகவும் கொண்டு வாழ்வோர் தான் மிகப் பெரும்பான்மையினர். அவர்கள் உத்தியோகத்திற்காக தெலுங்கு கற்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஏன்? தமிழகத்திலுள்ள பலர் உத்தியோகத்திற்காக ஆங்கிலம் படிக்கவில்லையா? தமிழர் இன்னொரு தமிழரைச் சந்திக்கும்பொழுது வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளோடு பேசும்போதுகூட ஆங்கிலத்திலேயே அல்லது பெரும்பாலும் ஆங்கிலச் சொற்களைக் கலந்தே பேசி வருவதை நாம் அன்றாடக் காட்சியாகக் காணவில்லையா? அதனாலேயே அவர்களை ஆங்கிலேயர்களென்று கூறுகிறோமா? இல்லவே இல்லை. அதுபோலத்தான் திருப்பதியிலுள்ள தமிழர் நிலையும். இவர்கள் தெலுங்கில் பேசுவதைவிட மிக அழகாகவும் பிழையின்றியும் தமிழில் பேசுவதை நான் நேரில் காண்கிறேன். அதுமட்டுமல்ல; மீண்டும் தமிழ்ப் பள்ளிகளை ஏற்படுத்தி தமிழ்க் கற்க வசதி செய்து தர வேண்டுமென்ற பேராவலும் திருப்பதி தமிழர்களிடையே நாளுக்குநாள் பெருகி வருகின்றது. எனவே, திருப்பதி தமிழகத்தைச் சேர்ந்ததே என்பதை மறுப்பதற்கான நியாய

மான காரணங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை.

தமிழில் நன்ருகப் பேசவும்; பேசினல் புரிந்து கொள்ள வும் சக்தியுள்ளவர்களை, தமிழ் நாட்டோடு உறவு கொண் டுள்ளவர்களை, தமிழகத்தின் பூர்வ குடிகளை, அலுவலுக்காக மட்டும் தெலுங்கு கற்ருர்கள், அண்டையிலுள்ள ஆந்திர மக்களோடும் அம் மொழியிலேயே பேசுகிருர்கள் என்ற காரணத்திற்காக ஆந்திரர்களாக எண்ணுவதா? அவர்கள் வாழும் தமிழகத்தின் வடக்கெல்லையைப் பறித்துக்கொள்ள முயல் வதா? அதுவும் மண்ணைசைப் பிடித்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட தன்மதத்தினர் வாழ பிற மதத்தவரின் நிலத்தைப் பறிக்க முயன்ருர் என்று ஜனுப் ஜின்னவைப் பழித்துப் பேசிய பிரகாசம் பந்துலுபோன்ற தலைவர்களா இந்த இழி செயலில் இறங்குவது?

ஆந்திரரும் தெலுங்கரும் ஒன்றல்ல

ஆந்திரருக்கும் தெலுங்கருக்கும் வேற்றுமை காண் கிறீர்களா? என்று ஒரு நண்பர் கேள்விச் சீட்டு ஒன்றை அனுப்பியுள்ளார். ஆந்திரருக்கும் தெலுங்கருக்கும் வேற் றுமை உண்டு என்பதை ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி யும் ஆந்திரத் தலைவர்களும் தங்கள் செயலாலேயே விளக்கி உள்ளனர். இதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சான்று காட்ட முடியும். அண்மையில் நிகழ்ந்த இரண்டொன் றைச் சொல்லுகிறேன்.

சென்னை அசெம்பிளிக்கு — சென்னை நகருக்குரிய பொதுத் தொகுதி ஸ்தானங்கள் நான்கு. அதில் இரண் டிற்கு அபேட்சகர்களை நிறுத்தும் உரிமை ஆந்திர மாகாண

காங்கிரஸ் கமிட்டிக்கு உண்டு. நகரின் நிரந்தரக் குடிகளான நாயுடு, செட்டியார் போன்ற வீட்டில்மட்டும் தெலுங்கு பேசும் தமிழர்களின் கணக்கைக் காட்டியே இந்த உரிமையை அது அடைந்தது. ஆனால், இந்த உரிமையை அது எப்படிப் பயன்படுத்தியது? தெலுங்கர்களுக்குச் சாதகமாகவா? இல்லவே இல்லை. ஆந்திரக் கமிட்டிக்கு தெலுங்கர் பலர் மனுச் செய்திருந்தும் அதை நிராகரித்து வக்கீல் தொழிலுக்கும் வாணிபத் தொழிலுக்கும் சென்னையில் குடியேறி புகழும் பொருளும் தேடிக்கொண்ட ஆந்திரர்களான டங்கட்டூர் பிரகாசம் பந்துலுவையும், குண்டூர் நரசிம்மராவையுமே நிறுத்தி வைத்தது.

சென்னை காங்கிரஸ் அமைச்சர் பதவிகள் பதின்மூன்றில் ஆறு தமிழ் நாட்டுக்கும் ஐந்து ஆந்திரத்துக்கும் ஒன்று கன்னடத்துக்கும் மற்றொன்று மலையாளத்துக்கும் என்ற ஒப்பந்தம் பிரகாசம் பிரதமராய் வந்த காலத்தில் ஆந்திர, தமிழ், கேரள, கன்னட மாகாணக் கமிட்டி தலைவர்களிடையே ஏற்பட்டது. அப்போதும் ஆந்திரத்துக்குரிய அமைச்சர் பதவிகள் ஐந்தில் சித்தூர், சென்னை ஆகியவற்றைச் சேர்ந்த தெலுங்கர்கள் எவரேனும் நியமிக்கப்பட்டனரா? இல்லை. ஐந்துக்கும் ஆந்திரர்களே நியமிக்கப்பட்டனர்.

இதிலிருந்து தெரிவதென்ன? தெலுங்கர் தங்களினும் வேறுபட்டவர் என்று ஆந்திரர்களே கருதுகின்றனர்; காரியத்திலும் காட்டுகின்றனர் என்பதல்லவா? சென்னையையும் சித்தூரையும் கேட்கின்றபொழுது—அந்தப் பிரதேசங்களுக்கான பதவிகளுக்கு உரிமை கோரும்போது மட்டும் ஆந்திர

ரோடு தெலுங்கரையும் சேர்த்துக் கணக்குக் காட்டுவதும் பதவிகளில் பங்கு பெற்ற பின்னர் தெலுங்கரை ஒதுக்கித் தள்ளி, ஆந்திரர்களே அடித்துக்கொண்டு போவதும்தான் நாம் கண்டுவரும் காட்சி.

அவ்வளவு எதற்கு? பிரகாசத்துக்குப்பின் அவரைப் போன்றே தெலுங்கு பேசும் ஓமந்தூரார் பிரதமராக வந்திருந்தும் ஆந்திர மந்திரி சபையை வீழ்த்தி தமிழர் ஆதிக்கம் பெற்றுவிட்டதாக ஆந்திரக் காங்கிரஸ் வாதிகளும் ஆந்திரப் பத்திரிகைகளும் கூக்குரலிடவில்லையா?

இவையனைத்தையும் நான் மகிழ்ச்சியோடு சொல்லவில்லை. சித்தூரையும் சென்னையையும் பறிப்பதற்காக ஆந்திரத் தேசபக்தர்கள் செய்துவரும் முன்னுக்குப்பின் முரணான செய்கைகளை, பேசும் வாதங்களை விளக்குவதற்காக வேதனையுடன்தான் சொல்லுகின்றேன். என்னைப் பொறுத்தவரையில், என் தமிழினத்தைப் பொறுத்தவரையில், தெலுங்கர் என்றோ ஆந்திரர் என்றோ வேற்றுமை பார்த்ததேயில்லை. சான்று வேண்டுமா? இதோ கூறுகிறேன்.

சென்னை நகரத்திற்குரிய பொது, விசேஷ தொகுதிகள் எட்டில் ஏழுக்கு ஆந்திரம் தெலுங்கருமே நிறுத்தி வைக்கப்பட்டதை மறுப்பார் யார்? இதற்கு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும் துணைபுரிந்ததென்பதை மறைப்பார் யார்?

சென்னையில் மட்டுமல்ல. தமிழ் நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட அசெம்பளி, சட்டசபை அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தெலுங்கர் என்பதையும் அவர்கள் தமிழ்நாடு காங்கிரசால் நிறுத்தி வைககப்பட்டு தமிழ்

வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதையும் நினைவூட்டுகின்றேன்.

பிரகாசம் பிரதமராய் இருந்தகாலத்தில் தமிழ் நாட்டுக் குரிய அமைச்சர் ஸ்தானங்கள் ஆறில் தெலுங்கு பேசுவோ ரான திருமதி ருக்மணி லக்ஷ்மிபதியும், திரு. குமாரசாமி ராஜாவும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தெலுங்கர்கள் என்பதற்காகத் தந்த மைனாரிட்டி உரிமையல்ல. அல்லது பங்கு கொடுக்காவிட்டால் பாகிஸ்தான் போன்று தமிழகத் துக்குள்ளே தெலுங்குஸ்தான் கேட்பார்கள் என்ற பயத் தினாலல்ல. பேசும் மொழியால் தமிழர் தெலுங்கர் என்று பிரிவினை காணாது வாழும் தாயகத்தால் அவர்களை தமிழ் நாட்டவராக எண்ணி, அவர்களது தேசபக்தியையும் தியா கத்தையும் அவர்களுக்குரிய தகுதியாகக்கொண்டு மேற்படி பதவிகள் அளிக்கப்பட்டன.

ஆகவே, கேள்விகேட்ட ஆந்திர அன்பருக்குச் சொல்லு கிறேன். ஆந்திரர் வேறு தெலுங்கர் வேறு என்று பிரித்துப் பேச நாங்கள் விரும்பவில்லை. அதுமட்டுமல்ல. ஆந்திரர்,—தமிழர்—என்ற வேற்றுமையைக்கூட பகைமைக்கு வித்தாக நாங்கள் கொள்ளமாட்டோம். அது தமிழ்ப் பண்பாடு மல்ல. நான் சொல்வதெல்லாம் இதுதான்: தமிழரின் நிலத்தைப் பறிப்பதற்காக மட்டும் தெலுங்கு தெரிந்தோ ரெல்லாம் ஆந்திரர்களே என்று அநீதிவாதம் செய்யாதீர்கள், தமிழரிடையே பிளவை யுண்டுபண்ணாதீர் என்பதேயாகும்.

முடிவாகச் சொல்லுகிறேன். சித்தூரில் வாழும் தமிழர், தெலுங்கர், ஆந்திரர் எல்லோரையும் வேண்டு கிறேன். நாம் ஒருவரை ஒருவர் பகைப்பதற்கோ மாறு

பட்டு அணிவகுத்து மற்போரிடுவதற்கோ, எவ்விதக் காரணமுமில்லை. ஆந்திர உழவனுக்கும், தமிழ் நாட்டு உழவனுக்கும் சரி; ஆந்திரத் தொழிலாளிக்கும் தமிழ் நாட்டுத் தொழிலாளிக்கும் சரி; பிணங்கி நின்றுப் போரிடுவதற்குக் காரணமேயில்லை. சென்னையையும், திருப்பதியையும் பறிக்க வேண்டுமென்ற திட்டம் ஆந்திர உழைப்பாளிகளிடமிருந்து வந்ததல்ல என்பதை நான் நன்றாக அறிவேன். ஆந்திர நாட்டிலுள்ள நிலப் பிரபுக்களும், பண மூட்டைகளும் வகுத்த திட்டமே அது.

எந்த ஜமீந்தாரிகளை ஒழித்துக்கட்ட திரு. பிரகாசம் சட்டம் கொண்டு வரமுனைந்தாரோ, அதே ஜமீந்தார்களின் பணஉதவியைக் கொண்டுதான் அவரும் அவரது தோழர்களும் தமிழகத்தின் மீது படை எடுத்து விட்டனர். ஆந்திர நாட்டின் எல்லைகளில் பிரசாரம் செய்ய நாற்பதாயிரம் ரூபாயை எடுத்து வைத்திருப்பதாக ஆந்திர மகா சபை அறிவிக்கிறது. சுதந்திர இந்தியாவில் வாணிபத்திலும் தொழிலிலும் மூலதனத்தைப் போட்டு மூட்டையைப் பெருக்க வளமுள்ள இடம் சென்னைதான் என்பதை ஆந்திரப் பணக்காரர் அறிந்துள்ளனர். ஆந்திரத்துக்கென இன்னொரு தலைநகரை ஏற்படுத்துவதற்குத் தொல்லைப் படுவதைவிட, இருக்கின்ற தலைநகரைப் பறிக்கும் செயலே எளிதானசெயல் என்று அவர்கள் முடிவு செய்து விட்டனர்.

ஆகவே, தமிழரசுக் கழகத்தார் ஆந்திர மக்களைப் பகைக்கவில்லை; ஆந்திர ஆதிக்க வாதிகளை எதிர்த்தே அணிவகுக்கின்றனர். அதுவும் தாக்குதல் போருக்கல்ல; தற்காப்புக் கிளர்ச்சிக்காகத்தான் என்பதை மறந்து விட வேண்டாம்.

தமிழரும் சரி, ஆந்திரரும் சரி; ஜனநாயக ரீதியில் மக்களிடையே பிரசாரம் செய்வோம். சித்தூர் ஜில்லாவில் எந்த எந்தப் பகுதிகள் தமிழகத்தைச் சேரவேண்டியவை, எந்த எந்தப் பகுதிகள் ஆந்திரத்தைச் சேரவேண்டியவை என்பதை எல்லைக் கமிஷன் மக்களிடையே வாக்கெடுத்துத் தீர்ப்புக் கூறட்டும். கிராமம், கிராமமாக வாக்கெடுக்கட்டும். வாக்காளரின் தீர்ப்பை இருதரப்பாரும் ஏற்றுக்கொள்வோம்.

"வேங்கடத்தை விடமாட்டோம" என்று முழங்குங்கள். உங்கள் பண்டைத் தமிழகத்தின் எல்லையைப் பறிகொடுக்காதீர்கள். இன்று வாழும் நம்முடைய சொந்த நலத்துக்காக அல்ல உங்களை நான் வேண்டுவது. இனி நமக்குப் பின்னேயும் என்றென்றும் வாழக் கூடிய தமிழகத்தின்—தமிழினத்தின்—நலத்துக்காக உங்களை வேண்டுகிறேன்; 'வேங்கடத்தை விடாதீர்கள்!' குமரிமுதல் வேங்கடம்வரை புதிய தமிழகத்தை உருவாக்கி, தமிழ் சோஷலிசக் குடியரசை அமைத்து பண்டைப் பெருமையையும் வருங்கால தமிழினத்தின் உரிமையையும் காப்போமாக!

மதிப்புரை

'ஜனநாயகம்': திங்கள் வெளியீடு; நிர்வாக ஆசிரியர் ஆர். கே. கண்ணன். விலை அணு எட்டு; ஆண்டுக் கட்டணம் ஐந்து ரூபாய், 10-11, ஷரபவி மாளிகை 157, பிராட்வே சென்னை. இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளையினரால் வெளியிடப்படுவது. சிறந்த கட்டுரைகள் பல மிளிர்கின்றன.

'போர்வாள்': வார வெளியீடு; ஆசிரியர்கள் காஞ்சி மணிமொழியார், மா. இளஞ்செழியன். விலை ஒன்றரையணு; ஆண்டுக் கட்டணம் ஐந்து ரூபாய்; 147, பவளக்காரத் தெரு, சென்னை. திராவிடக் கழகத்தின் கொள்கையைக் கடைபிடிக்கும் பத்திரிகை, உணர்ச்சியூட்டும் கட்டுரைகள் பல அடங்கியிருக்கின்றன.

'மாணவன்': வார வெளியீடு; ஆசிரியர் திரு. வயிரவன். தனிப்பிரதி விலை அணு இரண்டு. ராயவரம், புதுக்கோட்டை.

Regd. T. M. No. 110920

" ஸ்வஸ்திக் "

இங்க்

பவுண்டன் பேனுக்களுக்கு
பரிசுத்தமான பிரஞ்சிந்திய
தயாரிப்பை ஆதரிக்க
யாவரும்
உபயோகியுங்கள்

Manufacture :—
SWASTIK INK MANUFACTORY
(*Prop* :—N. R. N. Chari)
PONDICHERY

மாணவர் உலகத்தின் அரசியல் உணர்ச்சியை சித்தரித்துக் காட்டும் சிறந்த பத்திரிகை.

'புதுமை': மாதம் இருமுறை வெளியீடு; ஆசிரியர் 'இளங்கோவன், விலை அணா இரண்டு. 2, பெருமாள் செட்டித் தெரு, திருவள்ளூர். கதைகளும், இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகளும் நிறைந்தது.

'தமிழர் நாடு': வார வெளியீடு; ஆசிரியர் கி. ஆ. பெ. விசுவநாதம். விலை ஒன்றரையணா. ஆண்டுக் கட்டணம் ஐந்து ரூபாய். 45, 45, மணியக்காரத் தெரு, திருச்சி. தமிழ் நாட்டுப் பிரிவினையைக் கொள்கையாகக் கொண்டு வெளிவருவது.

திராவிடன்': வார வெளியீடு; ஆசிரியர் என். வி. நடராசன். தனிப்பிரதி விலை அணா ஒன்று. ஆண்டுக் கட்டணம் ரூபாய் மூன்றரை. திராவிடர் கழக கொள்கைகளை பரப்பும் நோக்குடன் வெளிவருவது.

'திருக்குறள் ஆட்சி': வார வெளியீடு, ஆசிரியர் ஆர். கே. அரங்கசாமி. ஆண்டுக்கட்டணம் நான்கு ரூபாய். ராசிபுரம், சேலம் ஜில்லா. திருக்குறளின் மாண்பை மக்களுக்கு அறிவுறுத்துவது.

'ஸ்ரீ காமாட்சி'; திங்கள் வெளியீடு; ஆசிரியர் திரு. எஸ். ஆர். கணபதி செட்டியார். விலை நாலணா. ஆண்டுக் கட்டணம் மூன்று ரூபாய். 108, தங்கசாலைத் தெரு, சென்னை. தெலுங்கு செட்டியார் குலத்தினரின் நன்மையைக் கருதுவது.

இலக்கியம்; திங்கள் இருமுறை வெளியீடு; ஆசிரியர் சி. இலக்குவனர். விலை நாலணா. சிந்து பூந்துறை, திருநெல்வேலி. சங்ககால இலக்கியங்களின் மாண்பை விளக்கும் சிறந்த வெளியீடு.

வெளியிட்டோர் : ம. பொ. சிவஞானம, 1-29. இருசப்ப கிராமணி தெரு. திருவல்லிக்கேணி, சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம சென்னை. **ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்**

Regd. No. M. 4503

திரு. Al. Rm. A. செட்டியார்

அவர்களின் கூட்டுறவில் தயாராகும்

ஸ்ரீ மகாலக்ஷ்மி பிக்சர்ஸாரின்

காஞ்சனமாலா

அல்லது

என் தாய்

என்னும் படத்தில் நடிக்கும்

ஜெயகுமாரி

கதை :	டைரக்ஷன் :	வசனம் :
T. ஸ்ரீனிவாசராவ்	சாரிபாபு & ராம்பாபு	A. வரதராஜன்

விவரங்களுக்கு:—

ஸ்ரீ மகாலக்ஷ்மி பிக்சர்ஸ்

2, கண்ணடி தெருவு. :: மைலாப்பூர்—சென்னை.

SENGUNTHA MITHRAN PRESS, MADRAS.